R 65
N23
224602

# ஸமர்ப்பணம்.

எது—ஸர்வபரிபூரணமாகியும், ஸச்சிதானந்த ஸ்வரூப ஸத்ய ஞா உபாஸநத்திற்கு உபாஸிதமாகியும், நிரபேக்ஷித வ்யாபக மாகியும், நிராதார-நிராலம்ப-நிர்விசேஷ-நிஸ்ஸங்க-நிஷ்களா-நிராமய-நிஷ்க்ரிய-ஸ்வதன்னுருபமாகியும், ப்ரும்மஞான-உப லக்ஷணத்திற்கு உபலக்ஷித-சுத்த ப்ரும்மமாகியுமிருக்கின்ற தோ.

எது—ஸாபேக்ஷித வ்யாபகமாகியும், ஸவிசேஷமாகியும், மாயாச பளிதமாகியும், ஜகத்காரண ஈச்வரனாகியும் விளங்குகின்றதோ.

எது—ஸமஷ்டிகாரணத்தைப் பொருந்தியந்தர்யாமியாகியதோ.

எது—முத்திலுள் ஸூத்ரம்போல-ஸர்வப்ராணிகளுடைய ஸூக்ஷ்ம சரீரத்திலுள்ளும் அநுஸ்யூதமான ஸூத்ராத்மாவாகி யதோ. ஸர்வசரீரமும் தானாகிய ஸ்தூலவிராட்டாகியதோ.

எது—ஸிருஷ்ட்யாதி நிமித்தம், ப்ரும்ம, விஷ்ணு, ருத்ர, ஸதாசிவ, மஹேச்வரராகியதோ.

எது—துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தமாக ராமக்ருஷ்ணாதி களாயவதரித்ததோ.

எது—ப்ரும்மஞானிகளுக்கு ப்ரும்மமும், மோக்ஷமும் தானாகின் றதோ.

எது—அப்யாஸிகளுக்கு எளிதில் ஷட்விதலிங்க தாத்பர்யத்தினால் சிரவண, மனன, நிதித்யாஸன, ஸமாதி, ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணுவதாகியதோ.

எது—ஸாதன ஸம்பத்துடன் தேடிவரும் முமுக்ஷுக்களுக்கு ஸத்குரு ஸ்வரூபமாய் தெரிசனங்கொடுத் தாட்கொள்ளு கின்றதோ.

எது—பக்தர்களுக்குப் பரவசத்தையும், ஆராமையையும் கொடுக் கின்றதோ.

எது—புண்டரீக பக்தருக்காக மண்டலங்களெல்லாம் புகழ்ந்தோங் கும் பண்டாபுரத்தில் அநேக தொண்டர்களை யாட்கொள் ளும் நிமித்தம் தண்டருவாக்கத்துடன் துண்டுச்செங்கலின் மேல் சஞ்சரித்து எப்பொழுதும் நாதப்ரும்மமாகி ப்ரகாசிக் கின்றதோ.

எது—ஒருவித ஸாமர்த்தியமுமில்லாத எளியேனாகிய அடியேனுள் ளத்திலிருந்து-இந்த தத்வானுஸந்தானபாடல்களையும், வேறு சில பாடல்களையும் உதிக்கச்செய்ததோ.

அந்த அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த பரமசிவத்தினிடம் இந்த தத்வானுஸந்தான பாடல்களும், வேறுசிலபாடல்களும் ஸம ர்ப்பணம் செய்யப்பட்டன.

ஸமர்ப்பணம் முற்றிற்று.

224602

# அவையடக்கம்.

அஹோ பக்திஞானவைராக்ய ஸம்பன்னர்களே! தானாக, பத லயங்களுடைய ஞானம் ஒன்றுமறியாத ஏழையாகிய அடியேன் பாடி அச்சிடவும் துணிந்தது எதுபோலிருக்கிறதென்றால்? அந்தகன் நவரத்ன பரீக்ஷைபார்க்கத் துணிந்ததுபோலவும், செவிடன் ஸங்கீதரஸத்தில் ரமிக்கத் துணிந்ததுபோலவும், முடவன் கொம்புத்தேனை சாப்பிட முயற்சித்ததுபோலவும் இருக்கின்றது. ஏனென்றால். காலக்ஷேபத்துக்குப் பெரியோர்களால் இயற்றிய பக்திப்பரவசத்தைத் தராநின்ற பக்தசரித்திரமாகிய பாடல்கள் எவ்வளவோயிருக்க, ப்ரும்மலோகாதி பதவிகளையும் த்ருணீகரிக்கச் செய்வதான வைராக்யத்தை உண்டுபண்ணுவதாகிய தேவாரம், திருவாசகமென்ன, மற்றும் அப்ரதிபந்த அபரோக்ஷ ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தைக் கொடுப்பதாகிய ஞானவாஸிஷ்டம், கைவல்யமாகிய பாடல்களென்ன, பார்த்தமாத்திரத்தில் சிதாகாசத்தில் அஞ்ஞானவிருள்நீங்கி ஸுஞ்ஞான ஸூர்யோதயம் ஓங்கச்செய்வதாகிய விசாரஸாகரம், பாலபோதம் என்ற புஸ்தகங்கள் வசனங்களாய் பாஷாக்ரந்தத்தில் இருக்க, இப்பொழுது அடியேன் லஜ்ஜையில்லாமல் இதைப்பாடத்துணிந்ததனால் யென்னுடைய பேதமையாகிய அஞ்ஞானம் நன்றாய் வெளியாயிற்று. அதெதனாலென்றால் எளியேனாகிய அடியேன், பெரியோர்கள் கூட்டமதில் செல்லாததாகியும், பேதமையாம் மோஹத்தைக் கொல்லாததாகியும், பிறவியெனும் சத்ருவை வெல்லாததாகியும், ப்ரும்மஞ்ஞான சாஸ்திரத்தைக் கல்லாததாகியும், பேரின்ப நிஷ்டையதைப் புல்லாததாகியும், ப்ரியமாய் மாவாக்கியத்தைச் சொல்லாததாகியும், பிரிவறவே தன்னிலையில் நில்லாததாகியும், இராநின்ற என்னால் செய்யப்பட்ட தத்வானுஸந்தானப் பாடல்களானாலும் இவை, அநேக ஸாதுக்கள் முகாந்தரமாய்க் கேட்ட அர்த்தமானபடியினாலே இவையிலுள்ள குற்றங்களை நீக்கி, ஸாதுக்களாயுள்ள நீங்கள் கருணையுடன் இதனை ஏற்றுக்கொள்வீர்களென்று வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அவையடக்கம் முற்றிற்று.



# அட்டவணை.


| பாட்டு லக்கம் | | பக்க லக்கம் | பாட்டு லக்கம் | | பக்க லக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ரகுராமனை | 2 | 15 | கட்டைவண்டிமார்க்கம் | 47 |
| ,, | பொருள் | 4 | 16 | நந்தமுகுந்தகோவிந்த | 48 |
| 2 | புண்யவதியே | 5 | 14-16 | பொருள் | 50 |
| ,, | பொருள் | 7 | 17 | நாகாருடவெகெதன | 52 |
| 3 | சிந்தனைநீத | 10 | 18 | கூடாரக்காரனைப்பார் | 53 |
| ,, | பொருள் | 12 | 19 | தாண்டக்கூடாதா | 54 |
| 4 | சம்போகெங்காதரனை | 14 | 20 | புலிகொலைகளவாதி | 55 |
| ,, | பொருள் | 15 | 21 | சாத்திடுவோம் மாலை | 56 |
| 5 | அத்யாரோபமதை கிளி | 17 | 22 | போதானந்தந்தான் | 58 |
| ,, | பொருள் | 19 | 23 | பண்டரிநாதா | 59 |
| 6 | போற்றிப்புகழ்மாலைகள் | 21 | 24 | எத்தனைவிதமானகோணல் | 60 |
| ,, | பொருள் | 23 | 25 | பண்டரிநாதனருகில் | 60 |
| 7 | பன்னிரெண்டுசூரியர் | 24 | 26 | வேங்கடநாதா திரு | 62 |
| ,, | பொருள் | 25 | 27 | பண்டரியில்வாழும் | 63 |
| 8 | ராக்ஷஸனைசம்ஹரித்த | 28 | 28 | மாசறுஞானி மகிமாதி | 64 |
| ,, | பொருள் | 29 | 29 | ஸபாஸூமேலிட | 65 |
| 9 | ராமராமஜெயராமராம | 30 | 30 | அய்யாநீர்தந்த | 66 |
| ,, | பொருள் | 31 | 31 | தன்னையறிந்தேனே | 66 |
| 10 | அன்னமயதுர்க்கத்தை | 33 | 32 | இவருக்குநானென்ன | 67 |
| ,, | பொருள் | 34 | 33 | பாபியாகினும்பரமார்த்தம் | 68 |
| 11 | அன்னமயதுர்க்கத்தை | 36 | 34 | தாயேசிவகாமி நீயேயில்லே | 69 |
| ,, | பொருள் | 37 | 35 | சிதம்பராலயத்தினில | 70 |
| 12 | பத்தியென்றொரு யோ | 39 | 36 | அனியாயம் மனியாயம் | 71 |
| ,, | பொருள் | 40 | 37 | தயைபுரிந்தாளாதேனே | 71 |
| 13 | நாராயணஹரி | 42 | 38 | நித்யநிராமயர்க்கு | 72 |
| ,, | பொருள் | 43 | 39 | நிற்குணவனுஸந்தானம் | 72 |
| 14 | சம்போகெங்காதரா | 45 | | | |


15 SEP 1923

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 28 | முழுமாக்ஷு | முழுமாக்ஷா |
| 3 | 10 | துகளறம் | துகளறப் |
| 3 | 19 | பிமாதி | சமாதி |
| 3 | 28 | ஸாநு | ஸாக |
| 5 | 23 | வளியை | வழியை |
| 6 | 11 | பவரோக்ஷ | அபரோக்ஷ |
| 6 | 13 | பூத்த | பூத |
| 7 | 7 | ஆறும் | ஆரும் |
| 7 | 20 | கடாக்ஷ | கடாக்ஷ |
| 7 | 4 | தவிடையும | தவிடையும் |
| 24 | 14 | ஸர்வா | ஸர்வ |
| 25 | 17 | ப்ரளயாய் | ப்ரளயமாய் |
| 25 | 22 | ப்ரயள | ப்ரளய |
| 26 | 7 | ஸ்த்தா | ஸத்தா |
| 31 | 1 | சேர்க்கதோரில் | சேர்க்தோரில் |
| 31 | 17 | அங்குற்ற | அக்குற்ற |
| 32 | 26 | ரோக்ஷ | போச |
| 37 | 20 | மயாவி | மாயாவி |
| 38 | 5 | துதி | தூதி |
| 42 | 24 | மாதிரன் | மாதிசன் |
| 44 | 13 | பேத | அபேத |
| 47 | 16 | அறை | அரை |
| 48 | 17 | நிதித்யாசன | நிதித்யாஸன |
| 51 | 19 | மூட | முட |
| 53 | 3 | விநோதமாய் | விஞேதமாம் |
| 54 | 12 | பூரண | பூரணு |
| 59 | 30 | ளாந்த | ளந்த |
| 59 | 30 | சிலபபுறறெளி | சிறப்புற்றெளி |
| 61 | 15 | ளோா | ளோர் |
| 64 | 10 | பழுந்தின்பதை | பழந்தின்பதை |
| 64 | 12 | சிவவதை | சிவத்தை |
| 64 | 16 | ஸவஞ்சித | லஞ்சித |
| 64 | 17 | சொல்லுசதை | சொல்லும்சதை. |

உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸச்சிதாநந்த ஸத்குருப்யோ நம:

# தத்துவ சிந்தனம்.

## விநாயகர் விருத்தம்.

கெல்பயிரிடுதல்போல நிகழ்த்திய வனுஸந்தானம்
பல்பலகோடிகாலம் பாரினில் பரவிநிற்க
கல்பனதீதமான காணரும் குஞ்சரம்தான்
அல்பமும் குறைகளின்றி யகத்தினி லேற்றினேனே.

15 SEP 1923

## சங்கராச்சார்ய ஸ்துதி.

மாலயன் தேடிக்காணு மாசறு பரமந்தானே
காலடி தனிலுதித்து கலியுகத் துயிர்களும்
மேலதாம் பரமாம் ஸத்தின் மேன்மையில் தலைவரும்
சீலராய் சிருங்கைசேர்ந்த சங்கர குருவேபோற்றி.

## குருஸ்துதி.

மத்துடைப்பட்டு நன்றாய் மறுகிடும் தயிராய் நானும்
சுற்றுற மனதின் பின்போய் சுழலுற்றுச் சாகுமென்னை
பித்ததேன் பொரிநீயில்லை பூதங்கள் புவனமில்லா
சித்ததே யென்றுரைத்த சித்கனனந்தா போற்றி.

## அவதாரிகை.

பரமாத்மாவாகிய பூமியிலிருக்கிற அஞ்ஞானதி ஊஷரத்தை நிவர்த்திக்க உபாயமும், அதன்பேரில் பயிர் முதலானது செய்து, அந்த விளைவிலுண்டான அன்னத்தைப் புஜித்து, ஜீவன் முக்தி, விதேகமுக்தியாகிற போஜனத்ருப்தியை அடையும்வரை விபரமாய் உரைக்கப்படுகிறது.

---

# 1-வது கட்டம்.

அருமைக்கன்னி அருந்தவஸுதே—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

ஸ்ரீ ரகுராமனை சிறப்புடனேற்றி
சித்ஸாதகமாம்பயிர் செய்வதை கேளாய்

பார்புகழ் ராமனை பகரும் ஸோமனை
பட்டாபி ராமனை பணிந்தெந்த காலத்தும்.
பரமாத்மாவாம் பூமியை யுழுது
பயிரிடும் தன்மையைப் பாங்கியே கேளாய். (1)

பரமாத்மாவாம் பூமியினிடத்தில்
படரஞ்ஞானமாம் ஊஷர முண்டாய்.
திரையாம் ஆவரணமாம் அழுர்களுடனே
திருந்த உரைப்பேன் தெரிந்திடக்கேளாய். (2)

மனமெனும் ஸூரியமாகி ரணத்தால்,
மயக்குமுலகாம் கானநீர் தோன,
தினமஞ்ஞான ஜீவாளாம் மான்கள்
திரும்பப் பிறந்திறந் தலைவதைக்கேளாய். (3)

கானல்நீரை கவர்ந்துமே குடிக்க
கருதிஞான ஹீனராம் மான்கள்.
தீனபாவத்தை யடைந்தொரு பலனையும்
தேடியும் கிடையாதலைந்ததைக் கேளாய். (4)

இப்படியே வெகு காலங்கள் கழிய
இதிலொரு முமுக்ஷுவாகிய புருஷன்
ஒப்பிலாத நிஷ்காமிய தபஸாம்
ஓதும் உரம்வைத் தழரதை நீத்தான். (5)



சித்த சுத்தியாம் ஊஷரம் மாற்றி
சிறப்புறும் ஸாதனத் தாலுழச்செய்து
பக்தியால் குருவா மிஷ்ட ரிடம்போய்
பரமோபதேச விரை வாங்கி விரைத்து. (6)

சிரவண மாகுற நாத்ததை நட்டு
ஸந்ததம் மனனமாம் ஸலிலத்தைப் பாய்ச்சி
தருணம் முளைக்கும் விபரீதக் களையை
தகும்நிதித் யாஸனப் பள்ளியால்பிடுங்கி. (7)

துத்ஸங்க மாடுகள் துவைத்து விடாமல்
துகளறும் பயிர்தான் தழைத்திடும் வண்ணம்,
சத்ஸங்கமான வேலியைப் பிடித்து
ஸல்லாபமாம் பயிர் ஸாரமாய் விளைய. (8)

காமமாம் வாஸனை பக்ஷிகள் ஞானக்
கதிரை ஆய்ந்து கடித்திடும் போது
க்ஷேமமாம் ஸத்வமாகிய பள்ளன்
சேரும் மயித்திரி வேட்டுறல் தோன்ற. (9)

ஸமாதி நெல்லு விளையும் பொழுது
ஸஞ்சலாதி நோய்களும் விழவே,
பீமாதி மந்திர விபூதி களினால்
சலித்திடும் நோயைச் சலியா தகற்றி. (10)

மனலய நெல் விளைந்த பிறகு
மதி யெழாததாம் கதிர் குலை சாய்ந்து
விஞ்ஞான ஸத்வ விருத்தியாம் பள்ளரால்
விளைந்திடும் கதிரை விரைவுட னறுத்து. (11)

ஸத்குரு ஸன்னதியாகிய களத்தில்
ஸத்வ அமானித்வ மாடுகளாலே
சுத்திச் சுத்தியே சூடதை யடித்து
ஸம்சயமற விக்ஷேப வைக்கோலைத் தள்ளி. (12)

---

## 1-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
|---|---|
| ஹே புண்யவதியே ! | |
| பரமாத்மாவையே | பூமியெனவும் |
| அதினுண்டாம் அஞ்ஞானத்தையே | ஊஷரமெனவும் |
| அதன் காரியமாகிய ஆவரணத்தையே | அழுக்களெனவும் |
| மனதினுடைய தோற்றமாகிய நாமரூபங்களையே | ஸூரியகிரணத்தில் தோற்றும் கானல் ஜலமெனவும் |
| ஞான ஹீன ஜீவர்களையே | மான்களெனவும் |
| பொய்யாய் தோற்றுகிற உலகத்தை மதித்து ஒரு ப்ரயோஜனத்தையும் அடையாமல் மயங்கிக் கொண்டிருப்பதையே | இந்தக்கானல் ஜலத்தைப் பானம்பண்ணவேணுமென்று வெகுகாலமாயலைந்து கொண்டு ஒரு ப்ரயோஜனத்தையும் அடையாமல் மயங்கிக்கொண்டிருப்பதெனவும். |
| அப்போது அபூர்வமாயிருக்கும் ஒரு முமுக்ஷு என்பதையே | அப்பொழுது அபூர்வமாயிருக்கும் ஒரு புருஷனெனவும் |
| நிஷ்காம கர்மத்தையே | உரம்வைத்தெனவும் |
| சித்த சுத்தியால் அஞ்ஞானத்தை மாற்றியதையே | உரத்தினால் ஊஷரத்தை மாற்றியதெனவும் |
| ஸாதன சதுஷ்டயத்தையே | உழவுசெய்தெனவும் |
| ஸத்குருவை தெரிசித்து அவர் கிருபையினால் அனுக்ரகிக்கப்பட்டப்ரும்மோபதேசத்தையே | இஷ்டரிடம் சென்று அவர் அன்பினால் கொடுக்கும் விரையை வாங்கிவந்து விரைத்ததெனவும் |
| ச்ரவணத்தையே | நாத்துநட்டெனவும் |
| மனனத்தையே | தண்ணீர்பாய்ச்சியெனவும் |
| ஸாதுஸங்கத்தையே | வேலிகட்டியெனவும் |
| விபரீத பாவனையையே | களைகளெனவும் |
| நிதித்யாஸனத்தால் விபரீத பாவனையைப் போக்குவதையே | பள்ளிகளால் களைகளைப்பறித்ததெனவும் |



| | |
|---|---|
| காமாதி வாஸனைகளையே | பக்ஷிகளெனவும் |
| ஸத்வகுணத்தையே | பள்ளனெனவும் |
| மைத்திரியாதி வாஸனைகளையே | வேட்டுக்களெனவும் |
| மைத்திரியாதி வாஸனைகளால் காமாதிவாஸனையை நாசம்செய்வதையே | வேட்டுக்களால் பக்ஷிகளை கொன்றெனவும் |
| அதன் பிறகு ஸமாதி விர்த்தியாயாகும் காலத்தில் என்பதையே | அதன் பிறகு நெல்லுவிளைய ஆரம்பிக்கும் காலமெனவும் |
| லய விக்ஷேப கஷாய ரஸாஸ்வாதத்தையே | பயிர்களுக்கு நோய்களெனவும் |
| வைராக்யாதி அப்யாஸத்தால் தடைகளை நிவிர்த்திப்பதையே | விபூதிகளினால் நோய்களை நிவர்த்தித்ததெனவும் |
| மனது லயமாகிறதையே | நெல்லுவிளைந்து குலைசாய்ந்ததெனவும் |
| அதற்குப் பிறகு | அதற்குப்பிறகு |
| ஸாத்விக விர்த்திகளையே | கதிரை அறுக்கிறபேர்களெனவும் |
| ஸாக்ஷாத்காரத்தையே | கதிரறுத்து எனவும் |
| ஸத்குரு ஸன்னிதானத்தையே | களத்திலெனவும் |
| அமானித்வாதி குணங்களையே | மாடுகளைவிட்டு சூடடிக்கும் போதெனவும் |
| விசேஷபமற்றிருத்தலையே | வைக்கோலைத்தள்ளியெனவும் |

1-வது கட்டம் முற்றிற்று.

---

## 2-வது கட்டம்.

இந்துவதன ஸுந்தராங்கீ—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

புண்யவதியே வனு ஸந்தானம்
புரியும் வளியைப் பாரடி,
நுண்ணறிவுனால் நன்னியே பர
மானந்த முறல் சேரடி. (1)

குருகடாக்ஷ வீக்ஷணமெனும்
குளிர்ந்த காற்று வீசிட
வருமா பாச ஞான நெல்லை
வாரியே தூற்றி வீசிட. (2)

ஸம்சயாதி பாவனாத்ரய
சண்டுசாவி பொருந்திட
ஹிம்சைக ளறத் தூர நிக்ஷேபமாது
இரையு மில்லாமல் பறந்திட. (3)

அனுபவமான மரக்காலதனால்
அளந் தம்பார நெல்லதை
கனபவரோக்ஷ ஞானமாகிய
களஞ்சிய மதில் குவித்திட. (4)

பூத்த காலமாகிய ப்ரதி
பெந்த அந்தனை யோட்டிட
பூதலம் புகழ் வாஸனாக்ஷய
புங்க யிலையைப் போட்டிட. (5)

பவிஷ்த் காலமாகிய ப்ரதி
பெந்த எலியைப் போக்கிட
புவியில் தத்வஞ் ஞானமாகிய
பூனையைக் காவலாக்கிட. (6)

வர்த்தமான ப்ரதிபெந்த மெனும்
வலுமையாகிய திருடர்க்கு
கர்த்தனருளா லிந்திரிய ஜய
காவலாள்களைப் போட்டிட. (7)

புகன்றிடும் மனோ நாசமாகிய
பூட்டது தனால் பூட்டியே
ஜகமற வைத்தாம் பூமியாகிய
ஸரியா யுலக்கை நாட்டியே. (8)



குறைவிலாத தன் முயர்ச்சியாகிய
குத்துக்காரியால் குத்தியே.
உரைய தாமாவந் தாவரண
ஊமி தனிடையும மாற்றியே. (9)

ஆனந்தாவிர் பாவமாகிய
அரிசியை நன்றாக் கிட்டியே.
ஊனமில்லாதும் பூமியாகிய
உலை நீரிலதைக் கொட்டியே. (10)

அதீதமாம் ஸமாதியாகிய
அங்கியால் வெந்த அன்னத்தை
விதிதமா மெய்யூராம் பூமியாகிய
விமலமாம் ஜீவன் முக்தியில். (11)

அரிய விதேக முக்தியாகிய
அன்னமருந்தி திருப்தியாய்
செரியும் சித்தானந்த மாகிய
செல்வமாய் வாழ்வார் யுக்தியாய். (12)

---

## 2-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம்: | திருஷ்டாந்தம். |
|---|---|
| ஹே புண்யவதியே! | |
| ஸத்குரு கடாக்ஷ வீக்ஷண்யத்திற்கு காத்திருத்தலையே | காற்றுக்கு காத்திருத்த லெனவும் |
| கடாக்ஷவீக்ஷண்யத்தையே | காற்றடித்தலெனவும் |
| ஆபாஸ ஸகிதமாகிற ஞானத்தையே | சாவிசண்டுகளுடன் கூடிய நெல்லெனவும் |
| கடாக்ஷ வீக்ஷண்யத்தினால் ஆபாஸ ஸகித ஞானத்தை விசாரிப்பதையே | சண்டு சாவிகளுடன் கூடிய நெல்லை காற்றில் தூற்றியெனவும் |

| | |
|---|---|
| அஸம்பாவனை ஸம்ஸயபாவனை விபரீத பாவனைகளை விசாரித்துத் தள்ளுகிறதையே | பதருகளையும் சண்டுகளையும் அரிசிக்கருக்காய்களையும் தூற்றித்தள்ளுகிறதெனவும் |
| ஸ்வானுபவத்தையே | மரக்காலாலளந்தெனவும் |
| அபரோக்ஷ ஞானத்தையே | களஞ்சியத்தில் போட்டெனவும் |
| பூதப்ரதி பெந்த, பவிஷத் ப்ரதி பெந்த, வர்த்தமான ப்ரதிபெந்தங்களையே | அந்து,எலி, திருடர்களெனவும் |
| இவைகளின் நிவர்த்திக்காக பூதப்ரதி பெந்த நிவிர்த்திக்கு வாஸனாக்ஷயத்தையே | இவைகளின் நிவிர்த்திக்காக அந்துக்குப் புங்கயிலையெனவும் |
| பவிஷத் ப்ரதிபெந்த நிவிர்த்திக்கு தத்வ ஞானத்தையே | எலிக்கிப் பூனையெனவும் |
| வர்த்தமான ப்ரதிபெந்த நிவிர்த்திக்கி இந்திரிய நிக்ரஹத்தையே | திருடர்களுக்குக் காவல்காரர்களெனவும் |
| மனோ நாசத்தின் த்ருடத்தையே | பூட்டைப்பூட்டி பெந்தோபஸ்துச் செய்தெனவும் |
| ஐந்தாம் பூமியில் நிர்விகல்ப ஸமாதியை புருஷ ப்ரயத்தனத்தால் வளரச்செய்து ஆனந்தாவரணத்தை மாற்றுவதையே | மேலேசொன்னநெல்லை உலக்கையைக்கொண்டு குத்துக்காரியால் குத்தி உமிதவிடுகளை மாற்றியெனவும் |
| ஸொரூபானந்தாவிர்ப்பாவத்தையே | அரிசியை அடைதலெனவும் |
| ௬-ம் பூமியிற்செய்யும் அதீத ஸமாதியையே | உலைநீரில் அரிசியைப்போட்டு அக்னியால் வெந்த அன்னத்தையெனவும் |
| ௭-ம் பூமியென்றுசொல்லப்பட்ட ஜீவன் முக்தியில் விதேக முக்தியாகி நித்யானந்தமாய் ஸுகிக்கவேணுமென்னும் பெரியோர்களின் ஆக்ஞையே | போஜனம்செய்து த்ருப்தியடைந்து நித்யானந்தமாய் வாழ்க்கடவதென்று பெரியோர்களின் ஆக்ஞையெனவும் சொல்லப்பட்டது, |

௨-வது கட்டம் முற்றிற்று.



உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸச்சிதானந்த ஸத்குருப்யோ நம:

## விநாயகர்விருத்தம்.

மந்தமுமுக்ஷு தன்னை மதியிலி குழந்தையாக
விந்தையா மனுஸந்தானம் விசதமாய்ப் பாடுதற்கு
சிந்தையி லொளிருமெந்தன் சித்கனீ பூதமான
தொந்தி விநயகர்தன் துணைப்பதம் காப்பதாமே.

---

## குருஸ்துதி.

ஆலையுள்ப்பட்டுநைந்து அழிந்திடும் கரும்பாய் ஜென்ம
வேலையுள்ப் பட்டுநொந்து வேகுண்டு போகு வேனைக்
காலை என் சிரமதாக்கிக் களிபெரும் மோக்ஷமாம் செங்
கோலையே அளித்த எந்தன் கோதறும் குருவே போற்றி.

---

## அவதாரிகை.

தாபத்ரயாதியாகிற உபாதிகள் ஸகிக்கமாட்டாமல், தாபத்தோடு அழுதுகொண்டிருக்கிற மந்தமுமுக்ஷுக்களாகிற குழந்தைகள் ப்ரும்மானந்தமாகிற நித்திரையை அடையும்பொருட்டு யுக்தியுடன் சொல்லப்படுகிறது.

# 1-வது கட்டம்.

நலுங்கிடவாரும் நந்தகுமாரா—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

சிந்தனாதீத சிவானந்தத்தி லெழும்
ஸந்ததானந்த மாம்தந்தி முகனுட
தாளதில் நான் பணிந்தேன்
வந்தித் துரைக்கும் பாடல் பிழையின்றி
காப்பரென்றே துணிந்தேன். (1)

நான்முகன் தேவியே நாதாந்த ரூபியே
நாவிலிருந்து பிழையறப் பாடல்
நலமுறச் செய்வா யடி
போதஸ்வரூபி பூரணானந்தி
பேரருள் பெய்வாயடி. (2)

போதம்நிறைந்த பெரியோர்களே உங்கள்
பாதம் பணிந்து பகருவதாமிப்
பாடலு மேற்றிடுவீர்.
பேதமையாலே புகன்ற பதத்தின்
பிசகதை மாற்றிடுவீர். (3)

மந்தமு மூகஜடங்க ளான குழந்தைகள்
மாசறும் ப்ரும்மானந்த நித்திரை செய்த
விந்தையைப் பாருங்கடி,
மந்தமதியை யகற்றி யுரைத்திடும்
மார்க்கத்தை ஒருங்கடி. (4)

ஸத்குரு வாகிய ஸாதுவாம் தாயவள்
ஸத்த ஸத் விவேகத்தொட்டிலிலே மண
மெத்தையைப் போட்டாளடி
சிஞ்ஞாஸு வானகுழந்தையைத் தொட்டிலில்
சீராக விட்டாளடி. (5)



தங்கதான மஹா வாக்கியா மிருத
தாராட்டது சொல்லித் தூங்கவைத்த உடன்
துங்கத்தைக் கேளுங்கடி,
பக்குவமாய்ப் பர மானந்தமதனைப்
பார்த்திங்கே மீளுங்கடி. (6)

ஆவரணமாம் அடரிருள் தன்னாலும்
அங்ஙனம் விசேஷபப் பேய்கள் தோற்றத்தாலும்
அருந்துயி லற்றதடி.
ஜீவபாவமான வாஸனா சிலப்பேன்
சிந்தையி லற்றதடி. (7)

ஸங்கல்ப மாகிய சள்ளுமூட்டை யாலும்
லங்கட ராகாதி யான கொசுவாலும்
அங்கம் பதறிற்றடி.
இங்கன மான விடாகற்ற யுக்தி
இன்றிக் கதறிற்றடி. (8)

உற்ற உபத்ரவ மாதி நிவ்ருத்திக்க
சுத்த விசாரமாம் சக்தி குழந்தைக்கிச்
சற்றேனு மில்லையடி.
மித்யாத்ருஷ்டியான ஜெந்துக்களைக் கொல்ல
யுக்தியும் வல்லையடி. (9)

ஸஹஜஞ் ஞான மாம் விழிப்புடன் கூடிய
ஸத்குரு வாகிய தாயும் ஸாதுவாம்
ஸஹிகள் ஸஹிதம் வந்து
அஹம்ப்ரும்ம ஞான தீபமேற்ற
அருள்மிக வேசுரந்து. (10)

## 1-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
|---|---|
| அஹோ புனிதவதியே! | |
| ஞான ஸத்குருவையே | தாயாரெனவும் |
| மந்த முமுக்ஷுக்களையே | குழந்தைகளெனவும் |
| ப்ரும்மானந்தத்தையே | நித்திரையெனவும் |
| விவேகத்தையே | தொட்டிலெனவும் |
| மனனத்தையே | மெத்தையெனவும் |
| வாக்யா ம்ருதத்தையே | தாலாட்டெனவும் |
| குருவானவர் மந்தமுமுக்ஷுக்களை விவேக மனனத்தையுடைய வனாகச் செய்தாரென்பதையே | தாயாரானவள் குழந்தைகளை தொட்டிலிலிருக்கும் மெத்தையின்மேல் விட்டாளெனவும் |
| ப்ரும்மானந்தத்தை அடையும் பொருட்டு வாக்யா ம்ருதத்தை உபதேசித்து ஸமாதியில் ஸுகிக்க வைத்தாரென்பதையே | நித்திரையை அடையும்பொருட்டு பாடல்களால் தாலாட்டி தூங்கவைத்தாளெனவும் |
| அந்த வேளையில் முமுக்ஷுக்களுக்குத் தன்னை மறைக்கும் ஆவரணத்தையே | அந்தவேளையில் குழந்தைகளுக்கு யிருட்டெனவும் |
| ஜெகத்தாகத் தோற்றுகிற விக்ஷேபத்தையே | பேய்களெனவும் |
| க்ரோதாதி விர்த்திகளுக்கு ஹேதுவாகிற வாஸனைகளையே | சிலேப்பேன்களெனவும் |
| ஓயாமலுண்டாகிற சங்கல்பங்களையே | சள்ளு மூட்டைகளெனவும் |



| | |
|---|---|
| விருப்பு வெறுப்பினால் வரும் ராகத்வேஷங்களையே | கொசுக்களெனவும் |
| மேலேசொல்லிய ஆவரண விக்ஷேப வாஸனை ஸங்கல்பராகத்வேஷ இத்யாதிகளால் அந்தர்முகத்தில் ஸுகிக்காமல் மந்த முமுக்ஷுக்கள் பஹிர்முகப்பட்டுப் பரிதவிப்பதையே | மேலேசொல்லிய இருட்டு,பேய் சிலேப்பேன், மூட்டை, கொசு, இத்யாதிகளால் நித்திரையை அடையாமல் குழந்தைகள் கதறிக்கொண்டிருந்ததுகளெனவும் |
| அந்தப் பரிதாபத்தை நிவிர்த்திக்கும்படியான த்ருட விசாரங்கள் முமுக்ஷுவிற்கு யில்லாததால் ப்ரும்மானந்தமடையவில்லையென்பதையே | அந்த உபாதிகளை நிவிர்த்திக்கும்படியான சக்திகள் அக்குழந்தைகளுக்கு யில்லாததால் நித்திரை அடையவில்லையெனவும் |
| மித்யாத்ருஷ்டி யில்லாததால் அதுகளைப் பாதம் செய்ய முடியாமல் முமுக்ஷுக்கள் தபித்துக் கொண்டிருக்கும்போது என்பதையே | அந்த ஜெந்துக்களை ஸம்ஹரிக்கமுடியாமல் குழந்தைகள் கதறிக்கொண்டிருக்கும் போதெனவும் |
| ஸகஜஞ்ஞான த்ருஷ்டியுடன்கூடிக்கொண்டிருக்கிற குருவையே | எப்பொழுதும் விழிப்புடன் கூடிக்கொண்டிருக்கிற தாயாரெனவும் |
| குருவானவர் தன்னிடத்திலிருக்கிற ஸாதுக்கள் ஸகிதமாய் சிஷ்யனிடம்வந்தாரென்பதையே | தாயாரானவள் தன்னுடைய ஸகிகள் ஸகிதமாய் குழந்தைகளிடம் வந்தாளெனவும் |

### 1-வது கட்டம் முற்றிற்று.

# 2-வது கட்டம்.

ஸ்ரீ ராமச்சந்திரனே—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

சம்போகெங்காதரனை—சங்கரி மனோகரனை
சங்கையற ஸ்துதித்திதைக் கேள்—கேள்—கேள்.

ஸாவ தானமாய் ஸத்குரு

ஆவரண இருளற—அஹம்ப்ரும்மஞ் ஞான ரத்ன
அரியதீப மேற்றியதைப் பார்—பார்—பார். (1)

ஆக்ஷேபமற அருள் குரு

விக்ஷேபப் பேயகல-விகிதநிர்வி கல்பமான
விபூதி மந்திரித்ததைப் பார்—பார்—பார் (2)

வாஸனா சிலைப் பேன்களை

வாசியாக்க மைத்திரி—வாஸனையாம் நையத்தால்
வாக்காகப்போக்கியதைப் பார்—பார்—பார் (3)

சித்த சங்கல்பாதி மூட்டையை

மித்யா த்ருஷ்டியதான—யுக்தியாம் நல்லெண்ணையால்
மர்த்தித்த விதமதைப் பார்—பார்—பார் (4)

ராக த்வேஷாதி கொசுக்களை

பாகமுற வேசத்குரு—பக்திசெய்த லானநல்ல
பங்காவால் வீசியதைப்—பார்—பார்—பார் (5)

ஞான சிஞ்ஞாஸுவாம் குழந்தைகள்

ஆனந்த நித்திரையில்—தானே தானாயிருந்து
மௌனமாய் ஸுஹித்ததைப்—பார்—பார்—பார். (6)

தூய ஸுகந்தக் தானையே

துனெற பேற்றிடணம்—திகழ்பெறச் சாற்றிடணம்
அஹமதை மாற்றிடணம் வா—வா—வா (7)

சித்கனானந்த நிலையதை

சிந்தையற யேற்றிடுவோம்—சின்மயமாய்ப் போற்றிடுவோம்
ஜென்மமதை மாற்றிடுவோம்—வா—வா—வா (8)



# 2-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
| --- | --- |
| ஹே ஸகியே! | |
| நான் ப்ரும்மமென்கிற ஞானத்தினால் ஆவரணத்தை நிவர்த்தித்தார் என்பதையே | தீபத்தினால் இருளை நிவிர்த்தித்தாளெனவும் |
| நிர்விகல்ப ஸமாதியினால் விக்ஷேபத்தைப் போக்கினாரென்பதையே | மந்த்ர விபூதிகளினால் பேயை விரட்டினாளெனவும் |
| மைத்ரியாதி வாஸனைகளால் காமாதி வாஸனைகளை நாசம் செய்தாரென்பதையே | தைலங்களால் சிலைப்பேன்களை நாசம்செய்தாளெனவும் |
| மித்யாத்ருஷ்டியால் ஸங்கல்பத்தை நாசம் செய்ததையே | நல்லெண்ணையால் மூட்டைப் பூச்சியை நாசம்செய்தாளெனவும் |
| குருபக்தியால் ராகத்வேஷங்களை நாசம் செய்ததையே | பங்காவால் கொசுக்களைப்போக்கினாளெனவும் |
| ப்ரும்மானந்தத்தில் ஸுகிக்கும்படி செய்தாரென்பதையே | நித்திரையை அடையும்படி செய்தாளெனவும் |
| இப்படிச்செய்த குருநாதனை எப்பொழுதும் மறவாமலிருக்க வேண்டியதையே | இவ்விதஞ்செய்த தாயாரை யெப்பொழுதும் மறவாமலிருக்க வேண்டியதெனவும் சொல்லப்பட்டது. |

2-வது கட்டம் முற்றிற்று.

உ

ஸ்ரீராமஜெயம்.

## விநாயகர் விருத்தம்.

அத்தியா ரோபமாயும் அபவாதமாயும் சொல்லும்
யுத்தியா லனுஸந்தான மூலகத்தோ ருய்யும் வண்ணம்
நித்தியா னந்தந்தன்னில் நின்றெழும் குஞ்சரந்தாள்
சுத்தமா முளத்தில்வைத்து ஸ[illegible]முற வாழ்த்தினேனே.

---

## குருஸ்துதி விருத்தம்.

ஆரண முடியில் வாழும் அமலமாம் பரனையிந்தத்
தாரணி தனிலே யுள்ள தன்யமாம் ஸ்ருங்கை தன்னில்
பூரண கருணையோடு புனிதமா யவதரித்த
காரண குருவாம் உந்தன் கழலிணை போற்றி போற்றி.

---

## அனுஸந்தானம் அவதாரிகை.

முதலில் தன்னிடத்தில் அத்யாரோப அபவாதமும் சொல்லி தன்னைக் காண்பிக்கப் படுகிறது.



# 1-வது கட்டம்.

ஆதிசிதம்பரத்தே—என்ற மெட்டு.

## கிளிக்கண்ணிகள்.

அத்தியா ரோபமதைக் கிளியே
அறிந்த மட்டுக்கும் நான்
அத்திமுகன் க்ருபையால் கிளியே
அறைகு வேனுனக்கு. (1)

குறியா மாகாசத்தில் கிளியே
குவிந்த மேகங்கள் போல்
அறிவாம் தன்னிடத்தில் ஸமஷ்டி
ஆரோப மாயையடி. (2)

புஷ்டியாய் மேகம் கிளியே
பொழிந்த நீர்களைப் போல்
வியஷ்டி யாரோபமாய் கிளியே
விளைந்த வித்தைகளே. (3)

உற்பன்ன மாகமரம் கிளியே
உரிய பூமியைப் போல்
கர்ப்பனு மூலமான கிளியே
கரிய வாஸனையே. (4)

பூமி யானதிற்குள் கிளியே
புதைந்த வித்தைப் போல்
காம வாஸனையால் கிளியே
கட்டுண்ட ஜீவாளடி. (5)

விண்மண் வித்திலுறும் கிளியே
விவித பேதங்களை
மண்ணு றும்கடினம் கிளியே
மறைப்ப தானதைப் போல். (6)

தத்வ ஸாக்ஷிக்குறும் கிளியே
தன்னுட பேதமதை
முற்றுமே ஆவரணம் கிளியே
முழுது மூடிமடி. (7)

தண்மண் ஸம்பந்தத்தால் கிளியே
தனித்த வித்ததுவும்
மண்ணது தனிலே கிளியே
மரமுளைத் ததுபோல். (8)

அவித்யா வாஸனையின் கிளியே
அநர்த்த ஸம்பந்தத் தால்
பவித்த விசேஷபம் கிளியே
பகறும் நானெனவே. (9)

தண்மண் ணுமடி கிளியே
தழைத்து முள்களுடன்
மண் ணதில் வளர்ந்து கிளியே
மரங்க ளானதுபோல் (10)

அவித்யா வாஸனையால் கிளியே
அகங் கார ஜீவாள்
புவியில் ராகாதியால் கிளியே
பிறந்து ழல்வாரடி. (11)

வெய்யில் காற்றுக்களால் கிளியே
வாடி வ்ருக்ஷங்களும்
துய்ய இந்துவினல் கிளியே
துளிர் தழைவது போல். (12)

ஸ்வப்ன ஜாக்ரமதில் கிளியே
சோர்வுற்று ஜீவான்
ஸுஷுப்தி ஆனந்தத்தில் கிளியே
ஸுகித்தி ருப்பரடி. (13)



கருவேல மரங்கள் கிளியே
கனவிரை கருடன்
கருவேலங் காடாய் கிளியே
கடுமை யானதுபோல். (14)

ஜென்மக் கோடிகளில் கிளியே
சேர்ந்த ஸஞ்சிதங்கள்
கர்மக் கோடிகளாய் கிளியே
கவலை யுற்றதடி. (15)

அத்யா ரோபமதைக் கிளியே
ஆராய்ந் துரைத்தபடி
முற்று மபவாதம் கிளியே
மொழியு மேனுனக்கு. (16)

---

## 1-வது கட்டத்தின் பொருள்.

---

# அத்யாரோபம் சொல்லப்படுகிறது.

---

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
|---|---|
| அறிவாகிய தன்னையே | ஆகாசமெனவும் |
| தன்னிடத்தில் ஸமஷ்டி ஆரோபிதமாயிருக்கிற மாயையையே | மேகமெனவும் |
| வியஷ்டி ஆரோபிதமாயும் அநேகவிதமாயும் பிரிந்த அவித்தையையே | பூமியிலுள்ள ஜலங்களெனவும் |
| அநேக கல்பனை மூலமான வாஸனையையே | பூமியெனவும் |

| | |
|---|---|
| அந்த வாஸனையில் அடங்கியிருக்கிற ஜீவர்களையே | பூமியிலடங்கியிருக்கிற வித்துக்களெனவும் |
| இந்த ஜீவர்கள் தன்னை மறந்த அக்ஞானத்தினா லுண்டாயிருக்கிற 28-தத்துவத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள பேதத்தைத்தெரியவொட்டாமல்ச் செய்த நாஸ்தி, நபாதியெனும் ஆவரணத்தையே | பூமிக்கும் அதற்குள்ளிருக்கிற விரைக்கும் அவடத்திலுள்ள ஆகாசத்திற்கும் ஒன்றுக்கொன்று பேதம் தெரியவொட்டாமல் மறைக்கும் மண்ணின் கடினசக்தியெனவும் |
| அவித்யா வாஸனைகளுடைய ஸம்மந்தத்தினால் நானென்று சிதாபாஸரூபமாய் முளைத்த விக்ஷேபத்தையே | பூமியில் ஜெலஸம்மந்தத்தினால் விரையானது விருக்ஷரூபமாய் முளைத்ததெனவும் |
| அஞ்ஞானத்தினாலும் வாஸனையினாலும் அகங்காரரூபமாய் ராகத்வேஷங்களோடே விருத்தியாகிற ஜீவர்களையே | ஜெலத்தினாலும், பூமியினாலும் வளருகிறதாயும், முள்ளுக்களோடு கூடியிருக்கிற கருவேலமரங்களெனவும் |
| தினமும் அந்த ஜீவர்கள் ஜாக்ரசொப்பனத்தில் தாபத்ரயத்தால் வாடி ஸுஷுப்தியில் ஸுகத்தை அடைகிறதையே | அந்தமரங்கள் வெய்யிலினாலும், காற்றினாலும் வாடி சந்திரிகையினால் குளிர்ச்சியை அடைகிறதெனவும் |
| அந்தஜீவர்கள் அநந்தங்கோடி ஜென்மங்களில் அநந்தங்கோடி வாசனைகளோடே சுழன்றுகொண்டிருக்கிறதையே | அந்த மரங்கள் அநந்தங்கோடி விரைகளோடே அநந்தங்கோடியிடங்களில் முளைத்து வளர்ந்து பெரிய காடானதெனவும் |

**1-வது கட்டம் முற்றிற்று.**



# 2-வது கட்டம்.

ஸ்ரீ ராமச்சந்திரனே—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

போற்றிப் புகழ்மாலைகள் சாற்றித் துரியபதம்
யேற்றியின் னிலைதனைக் கேள்—கேள்—கேள்
ஆற்றி யறிவினைத் தேற்றியே.

த்ருஷ்டாந்தங் களுடனே த்ராஷ்டாந்தங் களதனைத்
தெரிவித்த ஆரோபத்தைப் பார்—பார்—பார்
துஷ்ட வன்பவ மாறிட. (1)

உபமானங் களுடனே உபமேயங் களதனை
அபவாதக்ரமமாகக் கேள்—கேள்—கேள்
தப மிகுந்திடும் தன்யயே. (2)

கருவேலங் காடதுதான் ப்ருதுவி ஜெலங்களினால்
தருவாய் வளர்ந்ததனைப் போல்—நீ—கேள்
வருந்தி வாஸனை பொருந்தியே. (3)

தாழ்ந்து கருக்குழியில் வீழ்ந்து பவவாரியில்
ஆழ்ந்துழலும் ஜீவனைப் பார்—பார்—பார்
சூழ்ந் தடர்ந்திடும் காடதில் (4)

தெய்வ கெதியினாலே பெய்யு மழையில்லாமல்
வெய்யில்க் காற்றடித்தது போல்—நீ—கேள்
தெய்வா தீனத்தி னாலயே. (5)

ஆசையி லாதகர்மம் நேசமாய்ச் செய்துபர
மேசன் க்ருபைபெற்றதைப் பார்—பார்—பார்
பாசம் நீற்றிடும் பாவையே. (6)

உற்ற காற்றதினாலே சேற்று மேகமில்லாமல்
முற்று முலர்ந்ததனைப்போல்—நீ—கேள்
மற்று முரைத்திடக் கேளடி (7)

உற்ற க்ருபையால் பாப மற்று சித்த சுத்தியைப்
பெற்ற அதிசயத்தைப் பார்—பார்—பார்
புத்தியில் மிகும் பூவையே (8)

பட்ட மரங்களதில் மட்டற்ற முள்ளிலைகள்
கட்டற் றுதிர்ந்ததனைப் போல்—நீ—கேள்
திட்ட மாயின்னம் கேட்டிடாய் (9)

சித்த சுத்தியதனால் சுத்த ஸாதனம்நாலும்
ஸித்தமாய் வர்த்தித்ததைப் பார்—பார்—பார்
முக்தி விருப்பத்தில் முதல்வியே (10)

வெட்டுக்கோடாலிகொண்டு வெட்டுங்காரன்மரத்தை
வெட்டித்தீ யிட்டதனைப் போல்—நீ—கேள்
மட்டற்ற க்ருபை யோடுதான் (11)

வந்த ஸத்குருநாதன் தந்த ஞானவன்னியால்
வெந்த ஸஞ்சிதங்களைப் பார்—பார்—பார்
செந்தீ பற்றிய மரங்களும் (12)

ஒன்றோ டொன்றுரசிப் பொன்றிக் கிளைவேருடன்
நன்று யெரிந்திட்டது போல்—நீ—கேள்
துன்றிய ஞான வன்னியால் (13)

ஸஞ்சிதா காமியங்கள் வஞ்சமூலாக் ஞானத்துடன்
மிஞ்சிடா தொழிந்ததை நீ பார்—பார்—பார்
துஞ்சிடா ஞான ஸாதுக்கள் (14)

ஒருவ ருடனொருவர் பெரும்சிரவ ணாதிசெய்ய
வரும்ஜீ வத்வமகன்றார் பார்—பார்—பார்
தூசறும் நல் தோகையே. (15)



## 2-வது கட்டத்தின் பொருள்.

# அபவாதம் சொல்லப்படுகிறது.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
|---|---|
| இந்த ஜீவர்கள் இப்படி வாஸனாவசமாய் இருந்துகொண்டிருக்கும்போது தெய்வகெதியாலும், நிஷ்காம கர்மத்தினாலும் உண்டான ஈஸ்வரக்ருபையையே | இந்தக்காடானது இப்படிப் பூமியிலுள்ள ஜலத்தினாலும் மழையினாலும் விருத்தியாயிருக்கும்போது தெய்வகதியாலும் க்ஷாமத்தினாலும் உண்டான பெரிய காற்றெனவும் |
| அந்தக் கிருபையால் பாபம் போய் சித்த சுத்தியுண்டாகுவதையே | அந்தக்காற்றினால் மேகம்போய் மரங்கள் காய்ந்துபோகுவதெனவும் |
| அச்சித்தசுத்தியால் ஸாதன ஸதுஷ்டயம் உண்டாகுவதையே | அம்மரங்களிலிருக்கிற முள்ளுக்களும் யிலைகளும் உதிருகிறதெனவும் |
| அச் ஸாதன ஸதுஷ்டயத்தால் குருதெரிசனம் கிடைத்து அவர் கிருபையாலும் அவர் அனுக்ரகம் செய்யப்பட்ட ஞானாக்னியினாலும் இவனுடைய மூலாக்ஞானங்களுடன் ஸஞ்சிதாகாமிய கர்மங்களுடைய நாசத்தையே | கோடாலிமுதலான ஆயுதங்களுடன்கூடி வெட்டுக்காரன் வந்து வெட்டுகிறதினாலும், அவன் வைத்த நெருப்பினாலும், வேருகளும் கிளைகளும் கெடுகிறதெனவும் |
| அந்த ஸத்குருவினுடைய அனுக்கிரகத்தாலுண்டான ஞானத்தால் ஸாதுக்கள் ஒருவர்க்கொருவர் ஆத்மானாத்ம விசாரணைசெய்து ஜீவத்வங்களை அடியோடே நாசம் பண்ணுகிறதையே | அந்த வெட்டுக்காரன் வைத்த அக்னி மரங்களில்ப்பிடித்து காற்றினால் ஒன்றுக்கொன்று உரசிக்கொண்டு மரங்கள் வேரோடே நிச்சேஷமாய் எரிந்துபோகிறதெனவும் |

## 2-வது கட்டம் முற்றிற்று.

# 3-வது கட்டம்.

வாருமண்ணு வேன்று—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

பன்னிரெண்டு ஸூரியர் பாரிலொன் ருயுதித்து
சென்னிற மாய்ப்பூமியைச் சாம்பலாக்கி னதுபோல்
இன்னம் சொல்லுவேன் யிதுபோல த்ராஷ்டாந்தத்தை
இன்னம் சொல்லுவேன். (1)

ஸ்வரூப த்யானத்திலே ஸரியாய் வாஸனையெல்லாம்
பரிவாக வேயெரித்து பஸ்பமாக்கிய விதத்தை
என்ன சொல்லுவேன் பன்னிடா ப்ரும்மானந்தத்தை
என்ன சொல்லுவேன். (2)

ஸப்த மேகம்பொழிந்து சுத்தஜெ லார்ணவமாய
மொத்த மானசாம்பலை முற்றுமே கரைத்ததுபோல்—இ. (3)

நிர்விகல்ப நிஷ்டையில் நேர்ந்த ஸுகார்ணவத்தில்
ஸர்வா வாஸனைகளும் சாந்தமாகிக் கரைந்ததை—எ. (4)

நிறைந்த வெள்ளத்தோற்றத்தை நிமிஷம் பாடவாக்னியும்
குறையவே வற்றடித்த கொள்கையைப் போலவடி—இ. (5)

அகண்டா னந்தத்தோற்றமும் அரும்ஸகஜ நிஷ்டையால்
புகன்ற அஞ்சாம்பூமியில் போனஅதிசய மதை—எ. (6)

பாடவாக் கினிதன்னை ப்ரசண்டவா யுவடித்து
சர்டி யணைத்துவிட்ட ஸாஹஸ மதனைப்போல—இ. (7)

ஆறும் பூமியிலுண்டாம் அனுபவ பரவசம்
மீறச்சித் ஸாமான்யமும் மீதமிலா தடங்கிய—எ. (8)

ப்ரசண்ட வாயுவதுவும் பாடவாக்னியை மாற்றி
பரந்த ஆகாசமதில் பதிவா யடங்குதல்போல்—இ. (9)

சித்ஸாமான்ய மடங்கி ஸத்ஸாமான்யக் கோடியாய்
ஸொஸ்த மாகவேநின்ற சொலவரும் ஸுகமதை—எ. (10)



224602

தொழும்எழாம் பூமியான துளற்ற நற்பதத்தில்
செழும்சிதா காசமாக சேஷித்தவற்புதமதை—எ. (11)

அபவாத க்ரமமதை அமைவாகக் கேட்டோர்களும்
அபரோக்ஷ ஞானமதை அடைந்து ஸுகிப்பதைநான்-எ. (12)

சித்கன னந்தமான சீர்பெற மின்னிலையை
கற்கருணை யுடன்குரு நாதன் தந்த விந்தயினை—எ. (13)

---

## 3-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம் |
|---|---|
| அதற்குமேல் | அதற்குமேல் |
| ஸொரூபத்யானத்தையே | த்வாத சாதித்யர்களெனவும் |
| மேற்படித்யானத்தாலுண்டாகிற வாஸனநாசத்தையே | மேற்படித்வாத சாதித்யர்களால் பூமியானது வெந்து சாம்பலானதெனவும் |
| நிர்விகல்பஸமாதியில் உண்டாகிற ஆனந்தத்தையே | சப்தமேகத்தால்உண்டாகிற வருஷங்களெனவும் |
| அகண்ட பூரணனந்தமாய்த் தோன்றிக்கொண்டிருத்தலையே | மேற்படி வருஷத்தால் ஜெலப்ரளமாய் தோன்றிக்கொண்டிருத்தலெனவும் |
| மேற்படிதோற்றத்தால் வாஸனலேசம் செற்றுமில்லாமல் கரைதலையே | மேற்படிதோற்றத்தால் வெந்தசாம்பலும் கரைந்ததெனவும் |
| அத்தோற்றமும் மேல்ச் செய்செய்யப்பட்ட ஐந்தாவது பூமியிலுண்டாகிறஸகஜ ஸமாதியினல் சாந்தமாவதையே | அந்தப்ரயள வெள்ளத் தோற்றமும் பாடவாக்னியினல் சோஷிக்கப்படுகிறதெனவும் |

| | |
|---|---|
| அதற்குமேல் ஆறுவது பூமியி லுண்டாகிறஸகஜானுபவபரவசத் தையே | அதற்குமேல் ப்ரஜண்டமா ருதமெனவும் |
| மேற்படி பரவசத்தால் சித்ஸா மான்யமும் குறைகிறதையே | மேற்படி மாருதத்தால் பா டவாக்னியும் அணைந்துபோன தெனவும் |
| அந்த அநுபூதி பரவசத்தால் மேல் ஸ்த்தாஸாமான்யக் கோடி ஏழாவது பூமியென்று சொல்லப் பட்ட சிதாகாச மாத்திரமாக சே ஷித்ததையே | அந்தப்ரசண்ட வாயுவும் பாடவாக்னியை அணைத்து விட்டபிறகு ஆகாசத்திலொடுங் கி ஆகாசமாத்திரமாய் நிற்றலே அபவாதமெனவும் சொல்லப் பட்டது. |

3-வது கட்டம் முற்றிற்று.



உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸச்சிதாநந்த ஸத்குருப்யோ நம:

---

## விநாயகர் விருத்தம்.

ஸத்திய ஸ்வரூப மாயும் ஸர்வதா யொளிர்வதாயும்
சுத்தமாம் வ்யாபியாயும் சொலவறும் பரமதாயும்
புத்திக்கி ஸாக்ஷியாயும் பிரிவறும் போதாநந்த
சித்தது தானேயென்று சீர்பெற சிந்தைசெய்வாம்.

---

## விருத்தம்.

பூரண மோக்ஷதேச ப்ரும்மானு ஸந்தானந்தான்
தாரணி தன்னிலோங்கித் தழைத்துமே செழிக்கும் வண்ணம்
ஆரண முடியில் வாழும் அகண்டமாம் அறிவானந்த
வாரண முகனையுள்ளே வழுத்திநின் றேத்தினேனே.

# 1-வது கட்டம்.

---

மாத்வரே உமது பாலரேன்—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

ராக்ஷஸனை ஸம்ஹரித்த ராம ராம ராமவென்று
தாக்ஷியற ஸ்துதித்து மோக்ஷ தேசம்செல்லுவோம்.

மோக்ஷமெனும் தேசஅர ஸாக்ஷிதனை நான்புகல
மாக்ஷிமையாம் ஸத்குரு மலர்ப்பதம் துணையே. (1)

ஆனந்தப் பட்டணத்தின் அதிசயத்தை நானுரைக்க
ஆனைமுகன் அடியிணைகள் காப்பதாகுமே. (2)

பாரதியே நாவில்வந்து பதிவாகவே நீயிருந்து
பாடல்களைப் பிழைகளின்றி பகரருள்செய்வாய். (3)

மோக்ஷமெனும் தேசத்துறும் ஆனந்த பட்டணத்தில்
முக்திப்பெண்ணுடன் சைதன்யராஜன் முடிசூடவாழ்ந்தான் (4)

மோக்ஷமெனும் மார்க்கமதில் மோசமான ஸங்கடத்தை
மொழியுகிறேன் ஸாதுக்கள்தன் மகிமைதன்னாலே. (5)

பாமரதேசமென்கிற பருந்துலுங்க ராஜ்யமதில்
பாரிபிள்ளை யாதிதுலுக்கர் பான்மையைக்கேளாய். (6)

வெறிபிடித்த மர்க்கடம்ஓர் வெள்ளரிக்காய் முறித்துணல்போல்
வெகுவிதமா யிம்ஸித்தவர் தின்றுபோடுவார். (7)

அதற்குத்தப்பிப் பிழைத்துவிட்டால் அவிடம்விட்டு வரும்வழியில்
அதிசயத்தை அறையுகிறேன் அடைவுடன் கேளாய். (8)

---



## 1-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம் | திருஷ்டாந்தம். |
|---|---|
| தானே தானான மோக்ஷத்தையே | ஸ்வதேசமெனவும் |
| ஆனந்தத்தையே | பட்டணமெனவும் |
| சைதன்யத்தையே | அவ்விடத்திலிருக்கும் ராஜனெனவும் |
| முக்தியையே | கன்னிகையெனவும் |
| மேற்படி முக்தியிலேயே நித்ய ஸௌக்கியமாயிருக்கிறதையே | மேற்படி கன்னிகையுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறானெனவும் |
| அப்படி யிருக்கும்பக்ஷத்தில் ஸகல முமுக்ஷுக்களும், ஆனந்தமாய் ப்ரும்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்து அபேதமாய் முக்தியில் கூடி ஸௌக்கியமாமல் ஏன் ஜெனன மரணத்திலுழலுகிறார்கள் என்பதையே | அப்படியிருக்கும்பக்ஷத்தில் ஸகல ஜெனங்களும் அந்தப்பட்டணத்திற்குப் போய் ராஜனைக்கண்டு அவனுடன் ஸ்நேகம்செய்து பெண்ணுடன் கூடி வாழாமல் ஏன் துக்கப்படுகிறார்களெனவும் |
| இந்த வினாவிற்குவிடை முதலில் அந்த மோக்ஷத்தை அடையவொட்டாமல்செய்கிற பாமர விவகாரத்தையே | இந்த வினாவிற்குவிடை முதலில்ஸ்வந்ததேசம்போய் அடையவொட்டாமல்ச்செய்கிற ஒரு துலுக்கராஜ்யமிருக்கிறதெனவும் |
| மேற்படி விவகாரத்திலிருக்கும் பெண்டாட்டி பிள்ளைகளையே | மேற்படி ராஜ்யத்திலிருக்கும் துலுக்கர்களெனவும் |
| அவ்விடத்திலிருப்பவர்கள் வஸ்திரபாரணாதிகள் எவ்வளவு ஸம்பாதித்துக்கொடுக்கினும் த்ருப்தி அடையாமல் மென்மேலும் இவனை வருத்துவதையே | இவ்விடத்திலிருக்கும் துலுக்கர்கள் குரங்கானது வெள்ளரிக்காயை முறித்துச் சாப்பிடுவது போல் இவனைச் சாப்பிட்டுவிடுகிறார்களெனவும் |

### 1-வது கட்டம் முற்றிற்று.

# 2-வது கட்டம்.

## அடாணா—ராகம்.

ராமராமஜெய ராமராமஸீதா ராமராமாவென்று சொல்லுவோம்
ப்ரேமையாய் ப்ரஹ்லாதநாதியர்கள் சென்ற பேரின்பதேசம்நாம்
[செல்லுவோம்

காமதேசத்தாரும் கர்மசண்டாளர்கள்
கண்டுகுறுக்கே மறைத்திட
ஆமடாஎன்று அதட்டும்புஷ்பவாக்யம்
அறிய அவனுக்குரைத்திட. [1]

வேண்டாதோன் பெண்டாட்டி கால்பட்டாலுங்குற்றம்
கைபட்டாலும் குற்றம்போலவே
ஆண்டான்கருத்தை அறியாதவர்கள்
அவஸ்தையைக் கேளடி சாவே. [2]

விதிவிலக்காகும் விலங்கதைக்கற்பித்து
விசதமாகக் காலில் பூட்டிட
புதுமையாம் புண்ணிய பாபநரகத்தில்
போட்டு அவன்தனை வாட்டிட. [3]

அதற்குப் பிழைத்து அவனும் நடுங்கி
அடுத்ததேச மதை நாடிட
மதஸ்தர்கள் கூடி மறைத்து அவனோடு
மாறிமாறி உரை யாடிட [4]

எந்தவூரென்னப்பே செல்குபோகின்றாய்நீ
என்றுமதஸ்தர் மறைக்கவே
பெந்தமில்லாமோக்ஷ பேரின்ப தேசம்நான்
போகிறேனென்று உரைக்கவே. [5]

தங்கள் தங்கள் தேசம் தானேமோக்ஷமென்று
தந்திரமாக மிரட்டிட
சங்கையறவே சுருதியுக்திகள் பலச்
சொல்லியவனைப் புரட்டிட [6]



இப்படிச் சேர்ந்தகோரிலேதோ ஒருவன்தான்
ஈஸ்வரானுக்ரஹத்தாலேயே
தப்பறவிதெல்லாம் தானேபாஹ்யமென்று
தாண்டி வருகிற காலமே. [7]

---

## 2-வதுகட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம் | திருஷ்டாந்தம். |
| --- | --- |
| இந்த பெந்துக்கள் ஸ்தூலதேகஸம்பந்தமென்று தள்ளி மேல் கர்மகாண்டத்தில் செல்லுவதையே | இந்தத் துலுக்கராஜ்யத்தை தன் வலிமையினால் கடந்து "மேல்ச்சண்டாள தேசத்தில்" செல்லுவதெனவும் |
| கர்மகாண்டத்தையே | சண்டாள தேசமெனவும் |
| அதிலுள்ள ஸகாம சுருதிகளையே | அந்தத்தேசத்திலுள்ள சண்டாளர்களெனவும் |
| அந்த சுருதிகள் இவனுக்கு வேண்டாதோன் பெண்டாட்டி கால்பட்டால் குற்றம், கைபட்டால் குற்றமென்பதுபோல விதிநிஷேதங்களை கற்பிப்பதையே | அந்தச் சண்டாளர்கள் இவனுக்கு அநேக விதமான குற்றங்களை கற்பிப்பதெனவும் |
| அதனால் வரும் புண்ய பாபங்களையே | அக்குற்றங்களுக்காகக் கால்களில் போடும் விலங்கெனவும் |
| அதனால் வரும் ஸொர்க்க நரகங்களையே | ஜெயிலெனவும் |
| இந்தக் கர்மகாண்டத்தில் இப்படியே பலபேர்கள் உழன்றுகொண்டிருக்கும்போது சிலர் இந்தக் கர்மம் அநித்யமென்று நினைத்து அதைவிட்டு உபாஸனா மார்க்கத்தில் வருவதையே | இந்தச்சண்டாள தேசத்திலேயே பலபேர்கள் உழன்றுகொண்டிருக்கும்போது சிலர் இந்த சண்டாளர்கள் துஷ்டர்களென்று நினைத்து அவ்விடம்விட்டு வேறு தேசத்திற்குவருவதெனவும் |
| அங்குள்ள மதவாதியர்களையே | அவ்விடத்திலுள்ள சண்டாளர்களெனவும் |

| | |
|---|---|
| அவர்களிவனைமறித்து நீஎதை யடையப்போகிறாயென்று கேள்ப்பதையே | அவர்களிவனை மறித்து நீ யெங்கே போகிறாயென்று கேள்ப்பதெனவும் |
| அதற்கவன் ஸ்வானந்தமாயுள்ள மோக்ஷத்தையடையப் போகிறேனென்று சொல்வதையே | அதற்கவன் ஸ்வதேசத்தை யடையப்போகிறேன் என்று சொல்வதெனவும் |
| அதற்கு மதவாதிபர்கள் தங்கள் மதங்களையே மோக்ஷமென்று சொல்வதையே | அதற்கு அந்த தேசத்தோர்கள் தங்கள் தேசத்தையே ஸ்வதேசமென்று சொல்வதெனவும் |
| இதைத்தவிர வேறே மோக்ஷமில்லையென்றும் அதற்கு தகுந்தபடி சில ஆபாஸ சுருதியுக்தி அனுபவங்களைச் சொல்லி தங்கள் தங்கள் மதத்தில்ச் சேர்த்துப் போடுகிறதையே | இதைத்தவிர வேறே ஸ்வதேசமில்லையென்றும், அதற்கு தகுந்தபடி அநேகம் பொய்களைச்சொல்லி தங்கள் தங்கள் தேசத்தில் சேர்த்துப் போடுகிறார்களெனவும் |
| இப்படி அநேக ஜனங்கள் அகப்பட்டுக்கொள்வதையே | இப்படி அநேக ஜெனங்கள் அகப்பட்டுக்கொள்வதெனவும் |
| இவர்களில் தெய்வ செயலால் எவனோ ஒருவன் இவையெல்லாம் துக்கத்தைக் கொடுக்கும் பாசமென்று அதைவிட்டுத் தாண்டி வருவதையே | இவர்களில் தெய்வசெயலா லெவனோ ஒருவன் இவைகள் எல்லாம் மோசம் செய்யும் குதேசமென்று அவ்விடம் விட்டுத் தாண்டி வருவதெனவும் |
| வரும்போது ஸ்வானந்த மோக்ஷம் அடைவதற்குத் தடையாய் அதன் ஸமீபத்தில் தாண்டமுடியாத பஞ்ச கோஷங்களிருக்கிறதையே | வரும்போது ஸ்வதேசத்தை யடைவதற்குத் தடையாய் அதன் ஸமீபத்தில் தாண்ட முடியாத ஐந்து தூர்க்கங்களிருக்கிறதெனவும் |
| இந்தப் பஞ்சகோசங்களை எவ்விதம் தாண்டுவோமென்று பிரமிப்பதையே | இந்த தூர்க்கங்களை எவ்விதம் தாண்டுவோமென்று தபிப்பதெனவும் |

**2-வது கட்டம் முற்றிற்று.**



# 3-வது கட்டம்.

உத்திரவு பெற்றுக்கொண்டார்—என்ற மெட்டு

## கண்ணிகள்.

அன்னமய தூர்க்கத்தைக் கேள்
அன்புடைய பெண்மயிலே
பன்னக சயனனருளால்
பகருகிறே னின்னதையே. (1)

மோக்ஷதேசம் வந்துவிட
மோசமெல்லாம் தெரிந்துவிட
தாக்ஷியற்ற னந்தமோடு
தன்னுள்ளொன் றாகிவிட. (2)

தூர்க்கமதைப் பார்த்துவிட
அடிதுடித்து வேர்த்துவிட
தர்க்கமற தெய்வமதை
தயைபுரியென் றேற்றிவிட. (3)

ஸப்தாதிகளாம் சூலங்களை
வழியில் நட்டிருக்குமடி
பீதியுற உடலதிலே
பீழியது தைக்குமடி. (4)

ப்ராமண்யமாம் பேய்களது
பெலவந்தமாய்ப் பிடிக்குமடி.
ப்ரேமைபோல காட்டியது
ப்ரமிக்கவே கடிக்குமடி. (5)

வர்ணாச்ரமப் பேய்களது
வருத்திமிக தின்னுமடி.
தன்பெசலை யேடைத்து
தான்வெளியில் தள்ளுமடி. (6)

ஜாதியென்ற பேய்களது
ஸாஹஸித்துப் பிடிக்குமடி
ஜாதியையே பேசியது
கலங்கவே அடிக்குமடி. (7)

கோத்திரமாம் பேய்களது
கோபமுற வையுமடி.
ஆத்திரமாகப் பிடித்து
அவதியுறச் செய்யுமடி. (8)

குலமென்றொரு பேய்பிடித்து
குலுங்கவே நகைக்குமடி.
பெலவந்தமாக வுறுமிப்
பேயது பகைக்குமடி. (9)

இத்தனையி பத்தில்நின்று
இவனும்பிழைத் தானடி.
பத்தியோப்ராணமயத்தைப்
பார்த்துமே வருவனடி. (10)

---

## 3-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம் |
|---|---|
| முதலாவது அன்னமயகோசத்தையே | முதலாவது ஓர் தூர்க்கமெனவும் |
| அதிலிருக்கும் நாலாயிரத்தினுனூற்றுநாற்பத்தெட்டு வியாதிகளையே | அதில் நாட்டியிருக்கும் அநேக சூலாயுதங்களெனவும் |
| இன்னமும் ஜாதிவர்ண ஆச்ரம குலகோத்ரங்களைக் கற்பித்திருப்பதையே | இன்னமும் அநேக விதங்களாயுள்ளபேய்களைக்காவல்போட்டிருக்கிறார்களெனவும் |



| | |
|---|---|
| அதினாலபிமானம், கெர்வம், அகங்காரம், தர்ப்பம், டம்பமிதுகளிலழுந்திப்போவதையே | அப்பேய்களால் பிடிக்கவுமடிக்கவும்கடிக்கவும் பம்பரம்போலாட்டிவைக்கவும் படுவதால் வருத்தத்தைஅடைகிறானெனவும் |
| இதைப் பஞ்சபூதவிகாரமென்றுதள்ளி தெய்வகெதியாய் ப்ராணமயகோசத்தில் வருவதையே | தெய்வகெதியாய் அதற்குத்தப்பிப் பிழைத்து இரண்டாவது தூர்க்கத்தில் வருகிறானெனவும் |

---

## 3-வது கட்டம் முற்றிற்று.

# 4-வது கட்டம்.

எத்தனைதூரமிருக்குதோ—என்ற மெட்டு.

## கண்ணிகள்.

அன்னமய தூர்க்கத்தை
அகற்றியே வருகையில்
பண்ணும்பிராண கோசத்தின்
பான்மையைச் சொல்லக் கேளடி—கேளடி—கேளடி 1

கர்மேந்திரி யாதியாம்
காவல்காரர் கண்டிட
வர்மமாகப் பிடித்திட்டு
வருத்திவதைப் பாரடி—பாரடி—பாரடி 2

வாயுக்களாம் யந்த்ரத்தால்
வசனமாதியாம் அகழ்தனில்
போயழுந்திடத் தள்ளவே
போதமழிந்தான் பாரடி—பாரடி—பாரடி 3

ஆண்டவனருளாலே
அதையுங்கடந்து வருகையில்
தாண்டக்கூடாத மனோமய
தூர்க்கமதனில் வருகிறான்—வருகிறான்—வருகிறான் 4

மானதமெனும் மாயைப்பெண்
மைந்தன் சுரோத்ராதியெனும்
ஆனமாயாவி தன்னுடன்
அமர்ந்திருந்ததைக் கேளடி—கேளடி—கேளடி 5

பஞ்சவிஷய மாதியாம்
பசட்டும்மோகினி பெண்கட்கு
வஞ்சராகாதித் தூதிகள்
பதிமூன்றதைப் பாரடி—பாரடி—பாரடி 6



தூதிகள்கையி லகப்பட்டால்
திரும்பிடாமென்றுந் தானுமே
ஆதிநாத னருளினால்
அவ்விதமைவிட்டு வருகையில்—வருகையில்—வருகையில் 7

## 4-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம். |
|---|---|
| பிராணமய கோசத்தையே கர்மேந்திரியங்களைந்தையுமே | 2-வது தூர்க்கமெனவும் காவல்காரர்கள் ஐவர்களெனவும் |
| இதுகள் பஞ்சவாயுக்களாலே வசனாதி ஐந்துகளில் அழுந்தும்படி செய்து போகிறதையே | இவர்கள் ஐந்து யந்த்ரங்களாலே ஐந்து அகழ்களில் தள்ளிப்போகிறார்களெனவும் |
| தெய்வகெதியாலதுகளை விசாரித்து ரஜோகுண விகாரமென்று தள்ளி மனோமயகோசத்தை நாடுவதையே | அதற்குப் பிழைத்து அந்த தூர்க்கத்தையும் அதிலுள்ளும் காவல்காரர்களையும் யந்த்ரங்களையும் அகழ்களையும் கடந்து மூன்றாவது தூர்க்கத்தில் வருகிறானெனவும் |
| மனோமயகோசத்தையே | மூன்றாவது தூர்க்கமெனவும் |
| மனதையே | மாயைப்பெண்ணெனவும் |
| அதனாலாகிய ஞானேந்திரியங்களையே | அவள் பிள்ளைகளாகிற மாயாவிகளெனவும் |
| சப்தாதி ஐந்து விஷயங்களையே | ஐந்து மோகினிப்பெண்களெனவும் |

| | |
|---|---|
| அவ்விஷயங்களெவ்வொன்றினிடத்திலேயும் ராகாதி பதின்மூன்றுகள் மோகிக்கச்செய்கிறதையே | அவர்களெவ்வொருவர்களிடத்திலும் மோகிக்கச்செய்யும்படியாய் பதின்மூன்று தூதிகளிருக்கிறார்களெனவும் |
| அந்தப் பதின்மூன்று ராகாதிகளும் இவனையிழுத்துக்கொண்டு போய் சப்தாதிகளிடத்தில் தள்ளிப்போடுகிறதையே. | அந்தப் பதின்மூன்று தூதிகளுமிவனையிழுத்துக் கொண்டு போய்யந்த மோகினிப்பெண்களிடத்தில் தள்ளிப்போடுகிறார்களெனவும் |
| இவன் சப்தாதிகளுடைய மயக்கத்தைக் கடந்துபோகிறது ஒரு காலத்துமில்லவே யில்லையென்பதையே | இவன் அந்தமோகினிப்பெண்களுடைய மோகத்தைக்கடப்பது ஒருக்காலும் இல்லவே இல்லையெனவும் |
| தெய்வகிருபையால் அந்த மனோமய கோசத்தையும் விவேகித்துத் தள்ளி விக்ஞானமய கோசத்தில் வருவதையே | தெய்வகிருபையாலந்ததுர்க்கத்தையும் வலுமையால் தாண்டி நாலாவது துர்க்கத்தில் வருவதெனவும் |

4-வது கட்டம் முற்றிற்று.



# 5-வது கட்டம்.

## கும்மிக்கண்ணிகள்.

புத்தி யென்றொரு மோஹினிப்பெண் சிதாபாஸ அர்ச்சனை
மித்தை யாகச் சர்ப்பித்து மிரட்டும் விந்தையைப் பாரடி 1

பொரியாம் மாயாவி தங்களென் புலனும் மோகினி பெண்களென்
பரிவா யிவனை ஆட்டிடும் பான்மையைச் சொல்லக் கேளடி 2

கர்த்ருத்வமாம் விலங்கதை காலிரண்டிலும் பூட்டியே
போக்த்ருத்வமாம விலங்கதைப் பொருந்த யிடுப்பில் மாட்டியே 3

ப்ரமாத்ருத்வ மாகிய பெரியவிலங்க துசெய்து
ப்ரமிக்கங்கழுத்தி லேயிட்டு பேய்போ லாட்டுறார் பாரடி 4

ஜெனனமரண மாகுற ஜெயில்க்கொட்டடிக்குள் போட்டபின்
தினந்தாபத்ரயத் தணலதால் தபிக்க வாட்டுறார் பாரடி 5

விஞ்ஞானமயக் கோசத்தை விட்டுவெளியில் வருகையில்
அஞ்ஞானனைந்த மயமதாம் அடுத்த துர்க்கத்தைக் கேளடி 6

ஆனந்தமயக் கோசமாம் அந்தகாரக் காடதில்
ஈனகாரண தேகத்தோன் ஹிம்ஸிக்கக் கொண்டு போகியே 7

ஸுஷுப்தி ஆனந்தக் கானலின் ஜெலத்தைப் பானம்செய்வித்து
அழுந்தநன்றும் தோன்றுததாம் அதிகங்கஷ்டையும் கொடுத்திட 8

செத்தவனுக்கு ஸரியாக செய்து போட்டஅக் காலையில்
கர்த்தனருளால் துர்க்கத்தைக் கடந்தப்பாலே வருகிறான் 9

## 5-வதுகட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம் | திருஷ்டாந்தம். |
|---|---|
| விஞ்ஞானமயகோசத்தையே | நாலாவது தூர்க்கமெனவும் |
| புத்தியையே | மோகினிப்பெண்ணெனவும் |
| இது சிதாபாஸனை கற்பித்ததையே | அப்பெண் ஓர் அரசனைக் கற்பித்தாளெனவும் |
| ச்ரோத்ராதிகளினால் சப்தாதி விஷயங்களில் மோகிக்கச்செய்கிறதையே | மாயாவிப்பிள்ளைகளையும், மோகினிப்பெண்களையும் கூட்டிவைத்துக்கொண்டு இவனை மயங்கும்படி செய்கிறதெனவும் |
| சிதாபாஸனுக்கு பிழைகளால் ஏற்பட்ட கர்த்ருத்வ, போக்த்ருத்வ, ப்ரமாத்ருத்வங்களால் ஜெனனமரணங்களிலழுந்தியதையே | இவனுக்கு முன்சொன்னவைகளால் கால், கழுத்து, இடுப்பு இவைகளில் விலங்குகளை மாட்டி ஜெயில் கொட்டடிக்குள் போட்டு எனவும் |
| தாபத்ரயங்களால் தபிக்கும்படி இந்தஜீவனைச் செய்துபோடுகிறதையே | நானாவிதங்களாயுள்ள அக்னியாலிவனை வறுத்துப்போடுகிறாளெனவும் |
| தெய்வக்கிருபையால் இதுகளையெல்லாம் விலக்கிசெய்து ஆனந்தமயகோசத்தில் வருவதையே | தெய்வக்ருபையால் இவர்களிடமிருந்து தப்பி ஐந்தாவது தூர்க்கத்தில் வருகிறானெனவும் |
| ஆனந்தமயகோசத்தையே | ஐந்தாவது தூர்க்கமெனவும் |
| காரண சரீரத்தையே | தூர்க்கத்துக்குக் காரணமாகிய பூமியெனவும் |
| ஆனந்தமயத்தையே | பெரிய அந்தகாரக்காடெனவும் |
| சுஷுப்தி ஆனந்தத்தையே | கானல்ஜெலத்தைச் சாப்பிடச் செய்ததெனவும் |
| ஒன்றும் தெரியாமையையே | கள்ளையும் சாராயத்தையும் கொடுத்து செத்தவனுக்கு ஸமானமாகப் பண்ணிப்போடுகிறாளெனவும் |
| தெய்வகெதியாலானந்தமயகோசத்தையும் தாண்டி மோக்ஷத்திற்கு ஸமீபத்தில் வருவதையே | தெய்வகெதியாலைந்தாவது தூர்க்கத்தையும் தாண்டி ஸ்வதேசத்தின் கோட்டைவாசலில் வருகிறானெனவும் |



5-வது கட்டம்முற்றிற்று.

## 6-வது கட்டம்.

---

இந்த உரைதனைநந்தர் மகன்கேட்டு—என்ற மெட்டு.

### பல்லவி.

நாராயணா ஹரி நாராயணா ஸ்ரீமன்
நாராயணா பகவன். நாராயணா வென்று
நாதனை யேற்றிடுவோம்—தடைகளை
நன்றாக மாற்றிடுவோம். 1

மோக்ஷப் பட்டணத்தின் கோட்டவாசலதில்
மோகந்தெளிந்து மகிழ்ந்து வரும்போது
மோசத்தைப் பாருங்கடி—முகுந்தன்
நேசத்தை நேருங்கடி. 2

அரிஷடு வர்க்க வாஸனைகளாம்
அரியப் பட்டாளத்தா ரந்தயிடத்தில்
அடுக்கடுக் காகநின்றார்—அதிலே
அநேகர் மயங்கிச்சென்றார். 3

பாரிபண மாமிரண்டு கதவுகள்
பாங்கா யொருவரும் போகவொட்டாமல்
படர் களடைத்துவிட்டார்—சில
விடர்கள் சுழன்றுவிட்டார். 4

ஆசையெனு மொரு தாப்பாளது தனை
அந்தப்புரத்தி லொருவரும் செல்லாமல்
அங்கன மாட்டிவிட்டார்—சிலர்
இங்கன மாகிக்கெட்டார் 5

மாதிரஞன முமுக்ஷு ஒருவன்
மைத்திரி யாதிப்பட் டாளங்களோடே
மயங்காமல்ச் சென்றுவிட்டான்—படர்களை
மாசறக் கொன்றுவிட்டான். 6



விவேகவை ராக்கியக் கத்திகோடாலியால்
வேகமாய்ரெண்டு கதவுதாழ்ப்பாள்களை
வெட்டிப் பிளந்துவிட்டான்—உள்ளே
எட்டி நுழைந்துவிட்டான் 7

ஆத்மராஜன் தன்னைக் கண்டானவனுடன்
ஆனந்தமாக ஒன்றாகவே சேர்ந்த
அத்புதம் பாருங்கடி—யகண்ட
அனுபவம் நேருங்கடி. 8

முக்திப்பெண் ணோடுமுடிவற வங்கனே
நித்திய சாசுவதமாகவே வாழ்ந்திடும்
ஸத்தியம் பாருங்கடி—உங்கள்
ஸந்தேகம் தீருங்கடி. 9

### 6-வது கட்டத்தின் பொருள்.

| திராஷ்டாந்தம். | திருஷ்டாந்தம் |
|---|---|
| மோக்ஷஸமீபத்தையே | கோட்டைவாசலெனவும் |
| அரிஷட்வர்க்க வாஸனைகளையே | பட்டாளத்தாரெனவும் |
| இவைகள் மோக்ஷத்திலொருவரையும்போய் ஸுகிக்கவொட்டாமல் செய்வதையே | அந்தப் பட்டாளத்தார்களுள்ளே ஒருவரும் ப்ரவேசித்து ராஜனைக்கண்டு சுகத்தையடையக்கூடாதென்று செய்துவிட்டார்களெனவும் |
| அதேதெனில் ஸ்த்ரீபணமென்னும் ரெண்டுகளுடைய ஆசைகளினால் தடைசெய்துவிட்டதுகளையே | அவர்கள் ரெண்டுகதவுகளையும் சாத்தித்தாப்பாள்களையும் போட்டுவிட்டார்களெனவும் |

| | |
|---|---|
| பலபேரிதுகளிலழுந்திகெட்டார்களென்பதையே | இதனால் பலபேர்கள் வாசலில் நின்றுவிட்டார்களெனவும். |
| இப்படிக் கெட்டுப்போகிறவர்களில் தீரனாயுள்ள ஒருவன் மைத்ரியாதி ஸத்வாஸனைகளால் முன்சொன்ன அரிஷட்வர்க்கங்களுடைய வாஸனைகளை ஒழிக்கதையே | இப்படி நின்றுவிட்டவர்களுள் தீரனாயுள்ள ஒருவன் தன்னுடையபடர்களால் முன்கடைசெய்த படர்களைக் கொன்றுவிட்டானெனவும் |
| விவேக வைராக்யாதிகளால் ஸ்த்ரீ பணமென்னு மாசைகளை நாசம்செய்வதையே | கத்திகோடாலிகளால் அந்தக்கதவு தாப்பாள்களை பிளந்துவிட்டானெனவும் |
| பிறகு ஆத்மாவைக்கண்டு அவருடன் பேதமான முக்தியை அடைந்துநித்யானந்தமாய் பஹிர்முகமன்றியில் ஸுகித்திருந்தானென்பதையே | அவிடத்திலுள்ளேபோய் அங்கிருக்கிற ராஜனைக்கண்டு தன்னுடைய ஸ்த்ரீஸஹிதம் அவ்வதேசத்தில் சாசுவதமாக வாழ்ந்துகொண்டிருக்கிறானெனவும் |

6-வது கட்டம் முற்றிற்று.



# இன்னுமொருபக்ஷம்.

## அவதாரிகை.

மேலே சொல்லிய ப்ரயாசத்தைக் கேட்கும்போது யாவராலும் இந்த முக்தியை யடையக்கூடாது போல்த் தோற்றுகிறதே என்று சங்கைவரின் அதிசுலபமாயும், அதிரகஸ்யமாயும் அந்த முக்தியை அடைகிறதற்கு ஓர் வழியிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

## 7-வது கட்டம்.

என்னயன்ப மஹோ—என்ற மெட்டு.

### கண்ணிகள்

சம்போ கெங்காதரா—ஸாம்ப நடேசுவரா
சம்போ கெங்காதரா—ஸாம்ப நடேசுவரா
சம்போ கெங்காதரா—ஸாம்ப நடேசுவரா
சம்போ வென்றின்பமாய் வன்பவ மாற்றிட
சாற்றுங்களடி ஸத்குருவுட
சரண மாமலரை 1

மோக்ஷ மார்க்கத்துறும்—மோசங்களைக் கேட்டு
மோக்ஷாசை தன்னை—யெல்லாரும் துறந்திட்டு
தாக்ஷியாம் வன்பவம்—தன்னிலகப்பட்டுத்
தானேமயங்கித் தளருவதை விட்டு
வாருங்களடி சுலபமாம் முக்தி
வழியது தனிலே 2

ஆக்டி சைதன்ய—வரச னவனுக்கு
ஆப்த குருவா—மமைச்சரு மங்குண்டு
ஸ்வாத் மானந்த—பரிபூரண மானவர்
ஸ்வந்தம்போல் யாவரேன் வந்துசேக்ஷிப்பவர்
கேளுங்களடி குரும்கிமைபைக்
கேவண மாகவே 3

பேத மிறந்தவர்—போதம் நிறைந்தவர்
பேரின்பச்செல்வ—மதாகியுறைந்தவர்
தேகமாம் வன்பவம்—தன்னைத் துறந்தவர்
கேவல கைவல்ய மாகிச்செறிந்தவர்
போற்றுங்களடி தேசிகருட
பொற்பத மதனை 4

முக்தி விருப்பத்தோன்—முங்பு குருபதப்
மெத்தவே பக்தியாய்—முற்றும் ஸ்மரித்தவன்
சித்தம தறிந்த—சுத்த தயாநிதி
ஸத்திய முக்தியளிக்கும் குருபதி
வந்திடுவோர் கெஉன மார்க்கமாய்
வருத்த மகற்றிட 5

காலில் விழுந்தோரைக்—கைமாறன் றியிலே
காணு மக்ஷணத்தில்—காப்பாற்று கின்றவர்
மாலாம் பவத்தி—லழுந்தி விடாமலே
மேலாம் ஸுகத்தில் ரமித்திடச் செய்பவர்
மேன்மைகள் தன்னைச் சொல்லிட விப்போ
மெதுவாகக் கேளீர். 6

நித்திய பூரணச்—சந்திர னுகிற
நிர்மல குருமுக—மண்டலத் துறும்
சுத்தோப தேச—ஸுதாமிருத மதனை
சித்தோப சாந்தி யுறவே வருஷிக்கும்
ஸத்குருவின் க்ருபையது தனைச்
சாற்றுவேன் கேளாய் 7

---



# 8-வது கட்டம்.

இந்த அனியாயம்—என்ற மெட்டு.

கட்டைவண்டி மார்க்கம்—கவலையுற யோக்யம்
கனபயம தாக்கும்—மேல்கள்ளருடன் சேர்க்கும்
கஷ்டமிதென்றுதுரை—ரெயில் மார்க்கம்
கற்பித்தது போலவடி 1

வாதிகளை வென்று வருந்துர்க்கத்தில் நின்று
வஞ்சகரைக்கொன்று—வரத்தெரியா நெறியா
நேதிமார்க்க மதாகக்—கூட்டிவரும்
நேர்த்திகளைப் பாருங்கடி 2

ஆறுமாஸத்தாலே—பகலாவழி மேலே
ஆறுதினத்திலே—பகலர்செப்பாலே
ஆரு மதிசயிக்கக்—காசிசேரும்
அருமையதைப்போலவடி. 3

அனுதினா ளாலே—பகலா மறுள் மேலே
அறை நிமிஷத்திலே—பகன்றிடலே மேலே
ஆயும் விசாரமதால்—மோக்ஷம் சேரும்
அற்புதத்தைப் பாருங்கடி 4

கர்மமார்க்க மான—கால்நடையாய்ப் போனு
காமாதிய ராளுர்—கண்டுபிடித் தாலுல்
ஜென்ம மனேகமான—வெகு நாள்கள்
செல்லுமென்று எண்ணியடி 5

பஞ்ச யந்த்ரம்நீங்கப்—பகர்மனம் பதுங்க
பகட்டு மதிமங்க—படரிருள் ஒதுங்க
பஞ்ச கோசவிசார—ரயிலேறி
பறந்து வாசல் வந்தாரடி. 6

பாரிபணம் ரெண்டே—பெருக்கதவன் குண்டு
பகவத் க்ருபைகொண்டே—பகர்விசார மொன்று
தீரனு மாரதென்று—திறவுகோலால்
திறந்துள் நுழைந்தாரடி 7

# 9-வது கட்டம்.

---

நலுங்கிடவாரும் நந்தகுமாரா—என்ற மெட்டு

## கண்ணிகள்.

சங்கமுகுந்த யோகீந்த்ர ஜநார்த்தனா
சந்திவாகனு சாதாந்த சிவாவென்று
நன்றாக போற்றிடுவோம்
சிந்தனு நிச சிதம்பர வாஸனை
ஸந்ததம் போற்றிடுவோம் 1

ஆத்மாராஜனுக் கிவன்தனைப் பற்றி
அறிவித்தலான சிரவணாதி யாலே
அறிவித்தார் பாருங்கடி.
ஸ்வாத்மா னந்தஸாகம் ஸந்தேகமின்றி
ஸம்பாவித்த தோருங்கடி 2

மனோலாக்கிய மாம் அரண்மனைக் குள்ளே
மநுராஜர் தன்னை மனனதெரிசனம்
மாசறச் செய்துவைத்து
நிருத்தி த்யாசனமாகிய ராஜ
மாளிகையில் நிறுத்தி 3

ஸமாதி யாகிய சாப்பாடு செய்வித்து
ஸம்பூரண மாகப் போஜுமெனும்வரை
ஸல்லாபத் தோடிருந்து
ஸாக்ஷாத் காரமான த்ருப்தியான பின்பு
ஸந்தோஷ மாய்மகிழ்ந்து 4

இவ்விதம் செய்தகுருவின் பதமலர்
செவ்வைபாக் சூடி வியந்தவர் புகழை
பவ்யமாய்ப் போற்றலுற்றார்
எவ்விதமோ ஏழைதன்னை யாள்க்கொண்டது
வென்றுமே சாற்றலுற்றார் 5.



நித்ய தெரிந்தான் நிதியை, அடைந்துடன்
நேரும் ஸந்தோஷம் இதற்கிணை யாகுமோ
நேயமாம் என்குருவே
ஸத்யஞ் ஞானானந்த மாயெனைச் செய்திட்ட
சாந்தமாகும் திருவே 6

ஊனக் கபோதிக் குதித்த விழிகளால்
ஆனமகிழ்ச்சி இதற்கெதி ராகுமோ
ஆனந்தமாம் செரிவே
ஞானக்கபோதி எனக்குக்க ணீந்திட்ட
ஞானமாகும் விரிவே. 7

ஜென்ம வாரியின் சுழலி லகப்பட்டு
சுற்றிச் சுற்றியேநான் சோர்வுறும் வேளையில்
ஸத்குருவாம் ப்ரபுவே
ஸன்மயம் நீயென் றெளியேனை யாள்க்கொண்ட
ஸர்வமாகும் விபுவே. 8

ஸத்குரு நாதனே ஸர்வானுபூதனே
ஸந்தேகம் சற்றுமில்லாம லருள்செய்த
ஸத்குரு வாம்ப்ரபுவே
ஸச்சிதானந்தா ஸர்வ ஸித்தாந்தா
சாசுவதமாம் விபுவே. 9

நிர்குணமாகக் குருவை இவன்தானும்
நித்தியமாகப் புகழ்ந்து ஸதாகாலம்
நேசித்து வாழ்ந்ததைப் பார்
சித்தனானந்த மாய்வாழ்ந்திட நாமெல்லாம்
சிந்தித்திருந்ததை ஓர் 10

## 7, 8, 9-வது கட்டத்தின் பொருள்.

லேகு மார்க்கமாவது:—அந்தர்சைதன்ய ராஜனுக்கு அந்தரங்கம் ஆப்தராயும், அவரோடே அபேதமாயுமிருக்கிற ஸ்வரூபஞானத்தையுடையவராயும், மஹா தயாளுவாயும், மன்னுயிர்களெல்லாம் தன்னுயிராய்ப் பார்க்கிறவர்களாயும், காலில்விழுந்தவனைக் கைமாறன்றியில் காப்பாற்றுகிறவராயும், நித்யபூரணச்சந்திர மண்டலமாகிற முகத்திலிருந்து பெருகா நின்றிருக்கிற உபதேசாமிருதத்தை ராப்பகல்பாராமல் நிஷ்பக்ஷபாதமாய் நிறம்ப வருஷித்துக்கொண்டிருப்பவராயும், தீவ்ரபக்தர்களுடைய குருசரணஸ்மரணமாகிற மயில் சப்தத்தைக்கேட்டு ஓடிவருகிற மேகமாயும், அழியாததாயிருக்கிற ஆனந்தத்தைப்பபலே யனுக்ரஹிக்கிறவராயுமிருக்கிற மோக்ஷமந்திரம் வேணுமென்றவன் அவரை ஸ்மரித்தமாத்திரத்தில் அவர் ஸர்வஞ்ஞரானதால் உள்ளக்கருத்து வள்ளலுக்குத் தெரியுமென்கிற பழமொழிப்ரகாரம் வள்ளல்களுக்குள்ளே சிரோன்மணியானவரானதால் ககனமார்க்கமாய் இவனிடம்வந்து இவனை தடுத்தாள்க்கொண்டு காமமார்க்கமாகிற பூமிவழியால் கூட்டிப்போனால் பாமரதேசம் முதலானதுகளிலிருக்கிற துலுக்கர்முதலான சண்டாளப் பயல்கள் இவனைத் தடுப்பார்களென்றும், அதுவுமன்றியில் பஞ்சகோசமாகிறதுர்க்கங்களில் ஆபுத்தங்களும் படர்களும்மாயாவிகளும், நட்டுவனுடைய தாலிகளும் அந்தகாரக்காடுகளும் இவனைக்கொன்றுபோடுமோகையாலும், இன்னுமிவன் விவேகமில்லாத வசத்தனுதலால் நடக்கமாட்டாதவனாய் மாசம் காதவழி மாயமாய்ப் பறப்பானென்ற சொல்போல் இவனை நடத்திக்கூட்டிப்போகலாமென்றெண்ணினாலும், அநேக ஜென்மங்களாகிற வெகுநாள்ச்செல்லுமாகையால் ஆத்மானாத்ம விசாரமார்க்கமாகிற ரெயிலிலேற்றிவிட்டால் மேலே சொல்லியிருக்கப்பட்ட பெடஞ்சல்களொன்றும் இவனை பரிசிக்காதென்றும்ஆயிரங்கோடிஜென்மத்திலும் தீராதவஞ்ஞானம் அரைநிமிஷத்திலும்ஆறுமாசப்பயணத்தை ஆறுநாளில் ரெயில்கொண்டுபோய் விடுவதுபோல இந்த விசாரமார்க்கமும் மோக்ஷமாகிற



காசிதேசத்தில் கொடியில் கொண்டுபோய்விடுமென்று நிச்சயித்து நாட்டுமார்க்கத்தையும் அதில் போகவேண்டிய கர்மேந்திரியங்களாகிற வண்டிவண்டியின் ஸங்கடத்தையும் அந்த மார்க்கத்திலுள்ள காமக்கள்ளருடைய களவுகளையும் ஞானேந்திரியத்தாலிகளின் பயத்துகளையும் போக்கித்து விசாரணையாகிற ரயிலிலேற்றி மேலேசொன்ன ஸகலஸங்கடத்தையும் நேர்மார்க்கத்தால் கடப்பித்து மோக்ஷதேசமென்கிற வாசமிருக்கிற ஸ்திரீபுருஷணமென்கிற இரண்டுதவுகளில் மாட்டப்பட்டிருக்கிற ஆசையாகிற தாப்பாளை நாமரென்ற விசாரமாகிற திறவுகோலால் அதில்லவமாய் திறந்து உள்ளே இவனைக்கூட்டிப்போய் ராஜாவின் காதில் இவனைப்பற்றித் தெரிவிப்பதைப்போல இவரும் சிரவணமாகிற தெரிவித்தலை ஸந்தேகம்நீறும்வரை பூராவாய்த்தெரிவித்து மஹாவாக்ய விசாரமாகிற அரண்மனைக்குள் கூட்டிப்போய் மனனமாகிற ராஜதெரிசனம் பண்ணிவைத்து நிதித்யாஸனமாகிற ராஜஸ்திதியுத்தி ஸமாதியாகிற சாப்பாட்டையும் செய்வித்து இவனை போரும்போருமென்று சொல்லும்வரை கூடயிருந்து ஸாக்ஷாத்காரமான த்ருப்தியான பின் அவன் அந்த குருவாகிற மந்திரியையிருந்து ஸ்துதிக்கிறதாவது:—ஹேப்ரபோ! என்ன அதிசயம் தங்கள் க்ருபையால் பெற்ற பேற்றை யென்னவென்று சொல்லுவேன் ஆனால் உலகத்தில் முடவனுக்குக் கொம்புத்தேனும், நித்ய தெரித்ரனுக்கு நிதியும் பிறவிக்குருடனுக்குக் கண்ணும், கிடைப்பது அரிதென்று சொல்லுவார்கள். என் அளவில் யோசித்துப் பார்க்கும்போது அதுகளெல்லாம் கிடைப்பதையும் நமக்குக் கிடைத்திருப்பதையும் பார்க்கும்போது மலைக்கும் மயிருக்கும் மகாவிஷ்ணுவுக்கும் மனுஷனுக்கும் எப்படி ஸமமாகமாட்டாதோ அப்படி ஸமமாகமாட்டாதென்று தோன்றுகிறதையாவென்று இப்படித்தவத்து முன்னமிருந்த துக்கங்களின் நிவ்ருத்தியையும், இப்போது உண்டாயிருக்கிற தடையற்ற ஆனந்தத்தையும், குருநாதன் ஸந்நிதியிலிருந்து ஸதாவாழ்த்திக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

7, 8, 9-வது கட்டத்தின் பொருள் முற்றிற்று.

224602

மாவும் பலாவும் கோய்யாவும் பழுத்திருக்கும்—என்ற மெட்டு.

## பல்லவி.

நானாருடலேதென—நாடி விசாரித்திட
நானாயுத்தியதனைக் கேளன்னமே.

## சரணம்.

தானியமதைக் குத்தி—தவிடுமிகளை நீக்கி
தண்டுலமாக்கியது போலன்னமே
ஆனஉலகுடலை அகல நேதித்துத்தள்ளி
அறிவானந்தமாகுவாயடி யன்னமே. நா. 1

காஷ்டமுழுவதிலும் கலந்திருக்கும் வன்னியை
கடைந்தெடுப்பதுபோல வென தன்னமே
வேஷ்டையற உடலை வேகமாய் சோதித்துநீ
வேதாந்தப்பொருளாவாயடி யன்னமே. நா. 2

பூமியதனைவெட்டி புதையலெடுப்பதுபோல
புத்துலதைக்கேளடி எனதன்னமே
நேயச்ருதியுக்தியால் நேதித்துடலமதை
சேரும் பரமதாவாயடியன்னமே. நா. 3

சொப்பனத்தின்மயக்கம் ஜாக்ரத்தில் விழித்திட
செற்றுமிராதுபோல நேளன்னமே
சர்ப்பனுமயக்கமும் சிப்பாவிழிப்பினால்
ஞானுதொழியுமடி யெனதன்னமே. நா 4

என்றுரைச் செய்கினிலிட்டு ஏத்தப்படியாட்டியே
ஏன்றனை யெடுப்பது போலடியன்னமே.
தன்னிய வஸ்துதனை தனிசித்தருளுக்கு[illegible]
[illegible] யெனதன்னமே. நா 5



ஸௌராஷ்ட்ர—ராகம்.

## பல்லவி.

கூடாரக்காரனைப்பார்—விந்தைமாயக்
கூடாரக்காரனைப்பார்

## அநுபல்லவி

காடாந்தகார கருத்தது மாற்றும்
வீடாந்தன் நிலைகூடும்
விளையுகன்றுமேயோடுமே 1

## சரணங்கள்.

மித்தையான உடலாம்—கூடாரத்தை
மெத்தவேதான் சமைத்தான்
புத்தியாம் கண்ணாடியை கூடாரத்தில்
பத்திரமாய் பதித்தான்
சித்தமான படத்தில்—ஜெகமெனும்
சித்திரத்தை வரைத்தான்
வசித்தமா யிந்திரியாதி ஜெனங்களுக்கு
ஜாக்ரமுழுவதும் காட்டும்
ஜாலமாம் யின்பமுதாட்டும் 2

கர்மமாம் காசுக்கவன்—விசித்ரத்தை
காட்டி மறைத்திடுவான்
வர்மமா யிந்திரிய ஜனங்கள்
வாராமல் களைத்திடுவான்
தர்மமாம் சொப்பனத்தில்—வழக்கம்போல்
தானேதான் பார்த்திடுவான்
மர்மமிதென்றறியாத கனவினில்
மருண்டது தன்னிலே உழலும்
மாசதுதான்விட்டகலுமே 3

அவித்தையான திரையால்—கூடாரத்தை
அறியாமல் மூடிடுவான்
பவித்த வைஷ்டிப்திதனில்—ப்ரும்மானந்த
போஜனம் செய்திடுவான்

பலத்தைவிளைக்கும் சித்த—படத்தை
பறித்தெறிந்தேவிடுவான்
தவமாம் ஸத்வாந்தக்கரண கண்ணாடியும்
தனுவாம் கூடாரமும்மரிய
தானும் புருஷனும் துரியத் 4

துரியத்திலிந்தப்படியிருந்தவன்,
துகளறமேல் நடப்பான்
அரியவந்தக் கரணகண்ணாடியை
அதிவிரைவாயுடைப்பான்
பெரிய உடலமெனும்—கூடாரத்தை
பொடியவேதான் கெடுப்பான்
செரியும் சிவபரிபூரணநிதமாம்
சித்கனானந்தமதாக
சின்மயமாம் விதேகத் 5

## தமாஷ்சிந்து.

### பல்லவி.

தாண்டக்கூடாதா—ஜீவா
தாண்டக்கூடாதா

### சரணங்கள்.

தீண்டித்தீண்டி விஷயம்
தூண்டிலின்மீனதுவாய்
மீண்டுமீண்டுமுலகில்
மாண்டு பிறப்பதனைத் 1

எழுந்து எழுந்து செல்லும்
இந்திரியமாதிகளை
அழுந்தி அழுந்தியே
அகண்ட ஸ்வயம்வடிவாய்த் 2

ஓடி ஓடிஉலகில்
ஓயாத்துயரமதால்
வாடி வாடியிளைக்கும்
வாஸனையெலாம் மனதைத் 3

தேடித்தேடி உலகில்
த்ருவ்யமதைச் சேகரிக்கத்



கோடிகோடியதாகக்
கூடிவருமாசைகளைத் தாண் 4

யோசனிசாரமதைநற்
கோளரச் செய்துசுத்த
மாசற்ற தன்னிலையாய்
மாயாமயக்கமதைத் தாண் 5

எங்குமெங்கும் நிறைந்த
ஏகாம்பரத்திலுளம்
தங்கித் தழைத்துநின்று
தாபத்ரயாதிகளைத் தாண் 6

எட்டி எட்டிச்சென்றிடவே
எட்டாப்பெருமவெளியில்
மட்டறவே ஸுகித்து
முட்டாள்த் தனமதனைத் தாண் 7

எற்றிஎற்றி மனதை
ஏதமறத் தன்னிலையில்
பற்றிப்பற்றியிருந்து
பாழான வாஸனையைத் தாண் 8

சித்கனானந்தமதாம்
சீரான தன்பதத்தில்
நிற்கும் வகையறிந்து
நீளகங்காரமதைத் தாண் 9

## மத்யமாவதி—ராகம்.

### பல்லவி

புலைகொலை களவாதி செய்து நீ
பிழைப்பதேனடா

### அநுபல்லவி

நிலையிலாயிந்த நிகிலமதுதனில்
நிறைக்கவயிரத்தை வேஷித்துவழிதனில் 1

### சரணங்கள்.

புலையையுரைத்திட கேளடா நீ
புஜிக்கும் விஷயங்கள் தானடா
வலையதாமிந்த விஷயத்தேதடா
வருந்திவருந்தியே வாடுற்றாயடா 2

கொலைபதேதெனில் கேளடா—யிந்த
குரம்பையை நீனெனலையடா
தலைகால் வரையுடல்தான் ஜெடமன்றோடா
தத்வம் பதலக்ஷ்யம்தானே தானின்றோடா 3

களவதேதெனில் கேளடா—மன
கலைஸங்கல்பெழிச்சியதாமடா
அளவறும் ஸுகத்தழுந்திலைலடா
அகண்டச் சித்கனானந்தமாமடா 4

---

## வேதாந்த வில்வமாலை.

காலையில்கண்ணன்—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

சாத்திடுவோம் மாலைசாத்திடுவோம்—மேலாம்
சாச்வதமாலையைச் சாத்திடுவோம்
சேர்த்துத்தன்னுளமதை சிதம்பரத்தில் ஸதா
செயலறுமாலையை சாத்திடுவோம் நாம் 1

ஸச்சிதானந்தமபின்னமதாம்—நல்ல
சாந்தியாம்வில்வ தளங்களதை
எச்செயலுமற்றிருக்கும் சங்கிலியதில்
எசைத்தந்த மாலையை சாத்திடுவோம்நாம்

எஜனயாஜன மறுமாலையடி—யின்னம்
எஜலபை பஜவிலா மாலையடி
ஸுஜனர்கள்கூடி ஸுகோஷமாய் சாத்துற
ஸுகார்ணவ வில்வமாலைப்படிபது. 3



பண்ணர்க்கரியதாம் மாலையடி—செற்றம்
பாபியர்க்கெட்டாத மாலையடி
எண்ணர்க்கரிய ஏகாந்தநிலைதனில்
ஏதமற்றொளிர் வில்வமாலையடி. அது 4

துஷ்டருக்கெட்டாத மாலையடி—மனத்
தூயவருளத்துறும் மாலையடி
அஷ்டாங்கயோகியர்க் கனுபவமாகிய
ஆத்மானந்த வில்வமாலையடி அது 5

சாந்திக்கழிக்காத மாலையடி—சிவ
சங்கரனணியுற மாலையடி.
நேத்திரமாம் நிஷ்டையில் நின்றுலஸுகித்திடும்
நிர்மலமாம் வில்வமாலையடி. அது 6

நட்டாலும் செய்யாத மாலையடி—மொத்த
தாழ்வுடையோர்க்குறு மாலையடி.
மட்டற்றானந்த மாகிய உளத்தினில்
மாசற்றொளிர் வில்வமாலையடி. அது 7

தொண்டர் களகத்துறு மாலையடி—கெட்ட
தோஷமுள்ளோர்க்கெட்டா மாலையடி
கொண்டல்வண்ணனும் நீலகண்டனும் சாத்துற
யோகத்தொளிர் வில்வமாலையடி. அது 8

சண்டாளையுதைத்திடும் மாலையடி—வ்ருதா
சண்டைசெற்றறாத மாலையடி
தண்டறானந்தம் தழைக்கும் ஸமாதியில்
தானேதான் ஆன மாலையடி. அது 9

போதானந்தமாம் மாலையடி—அது
போக்குவரத்திலாத மாலையடி.
நாதானந்தத்தை நாடும் உளத்தினில்
நாயகமாம் வில்வ மாலையடி. வேத 10

நிர்க்குணஸொருபமாம் மாலையடி—ஞான
நிஷ்டானுபவத்துறும் மாலையடி.
சித்கனானந்த சிதம்பரத்திலுறும்
சீர்பெற்றொளிர் வில்வமாலையடி. அது 11

---

பூமிமேச்சிமேண்ணுமலைக் கோர்துணை—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

போதானந்தந்தான் பிரிவற்றொளிர் பரி பூரணா
ஓதும் ஆரணா என் காரணா ஜக
பேதாதியற்ற பெரும் செல்வமாம்ஸுக
காரணா பவ நிவாரணா. 1

ஆனைவினையை யகற்றியதாய் ஆதி மூலனே
லெக்ஷ்மி லோலனே மிகு சீலனே நீ
யேனையா யென்னை யாளாததைச் சொல்பரி
பாலனே மயேந்திர ஜாலனே. 2

பக்தருக்காய்ப்பெருந் தூணில்வந்த நர ஸிங்கனே
ஸ்ரீரங்கனே பவ பங்கனே பரி
சுத்தருளத்தில் ஸுகாமிருத பாகிய
துங்கனே மேகாங்கனே. 3

வானவருக்காக வாமன னாகிய நாதனே
ப்ரபோதனே ஸுக சீதனே வரும்
தீவினையாவும் த்ருவிக்ரமனாய் வந்த
பாதனே வேத கீதனே. 4

த்ரௌபதியின் துயர் தீரத்துகிலீந் தாண்டவா
க்ருபைகொண்டவா அருள் பூண்டவா துஷ்டக்
கௌரவரைக் காணத் தூதாகச் சென்றுரை
விண்டவா பின் மீண்டவா. 5

காலதினால்கருங் கல்லைப்பெண் ணாக்கிய கர்த்தனே
காகுஸ்தனே வேதார்த்தனே பரி
பாலனம் செய்தெனைப் பக்தனாய்ச் செய்வாய்
ப்ரஸித்தனே எஸ தந்தனே. 6

குன்றதைநன்றாய்க் குடையாய்ப் பிடித்த கோவிந்தனே
அன்பர் ஸ்வந்தனே நந்தர் நந்தனே என்றும்
குன்றாதபக்தி சிறந்த தேவகிதன்
மைந்தனே ஸதா நந்தனே. 7



சோமுகன் தன்தலை தரையில் வீழச்செய்த தீரனே
அதிசூரனே வில் வீரனே பத்துத்
திசைபுகழும் எந்தன் மேதிகேள ஸஹ்யா
குமாரனே கம்பீரனே. 8

சித்தனானந்தகிய மாயோளிர் ஸ்வப்ரகாசனே
அன்பர் நேசனே ஜெகதீசனே
நிர்க்குணமாகி நிறைந்தொளிரும் ஸர்
வேசனே பவ நாசனே. 9

---

### மூகாரி—ரூபகம்.

பாலிம்பவம்மா—என்ற மெட்டு.

### பல்லவி.

பண்டரிநாதா பகரவொணாத நீதா
பண்டரிநாதா

### அநுபல்லவி.

தொண்டுசெய் தேற்றுமெந்தன்
துயரகற்ற வொணாதா
தண்டாறு மின்பமதாப்
தழைக்கும் துரியாதீதா. பண். 1

### சரணங்கள்.

ஏழையினும் ஏழை நானலவோ எனது துயரங்களை
எவனென் றெடுத்தினைச் சொலவோ
கோழையே யுனக்குவரம் கொடுக்க தெய்வம் பலவோ
கோவிந்தா வெந்தன்மொழி கொடியகாட்டில் நிலவோ. பண்.

பக்தவத்ஸல பாண்டுரங்கா பக்தருக்காகத் தூணில்
பரிவாயுதித்த நரஸிங்கா
எத்தனை துயரென்று மியம்பிடுவேன் மோகாங்கா
முற்று முணர்ந்ததான முடிவறு மகளங்கா. பண்.

நிர்க்குண மாயொளிரும் நேயா நிகிலஸ்ருஷ்டி யாதியை
நிகழ்த்திடுவதாகிய மாயா
சித்தனாநதமயாக சிறப்புறவொளிரும் தூயா
மிதிபேனை பார்கொண்டுவாய் ஸ்ரீராம பக்தஸகாயா. பண்

காலையில்க்கண்ணனென்ற—மெட்டு.

## கண்ணிகள்.

எத்தனை விதமான கோணலடா—அதை
எடுத்துரைத்தால் மிக நாணமடா
முக்தியதாம் தத் ஸொருபத்தை மறந்துநீ
முளைத்திட்டதே முதல் கோணலடா. 1

முந்தியகோணலை யறிந்திலையேன்—நீ
மீண்டும்தன் நிலையதை பொரிந்திலையேன்
அந்தர் முகப்நீயாகாக் குறையதால்
அடைந்திட்டதே ரண்டாங் கோணலடா. நீ 2

இவளவுதானோ வொன் கோணலடா—அடா
இப்படிமேவன் ஜீவா உனக்கடா
அவமாகு முடலதை யகமகமென்று நீ
அழுந்தியதே மூன்றும் கோணலடா. 3

இம்மட்டிலே கோணல் நிலைத்ததோடா—அடா
இன்னமு முறைதாதிடுமேவன் கேளடா
எம்மட்டோ விஷயத்தில் எளிதால் விழுந்தழுந்தி நீ
எனதெனவே நாலாங் கோணலடா. 4

போதானந்த ஸொருபமடா—அது
பிரிவற்றொளிர்நிலை நீயடடா
ஆதாரப்பெரும் போதத்தழிந்திய
அரியசித்தனனந்த மாகிடடா. 5

---

காலையில்க்கண்ணனென்ற—மெட்டு.

## கண்ணிகள்.

பண்டரீ நாதனருகில் நின்று—பக்தர்
புண்டரீகாக்ஷனே காருமென்று
மண்டலாதாரம தாகவே யனைவரும்
தண்டமர்த்தன மடிகிறார்—தொண்டர் 1



பக்திமிகுந்து பஜைபஜைதந்து—பக்தாள்
பகவான் குணமெனைக்கலை ஸ்துதித்து
சுத்திசக்தி நின்றுமுடியே யகலரும்
ஸோஹம் ஸோஹமென் றுடிக்கிறுள்—நாம். 2

விட்டல்விட்டல் விட்டலென்று—அவர்
விட்டலர் ஸந்நிதானத்தில்ச் சென்று
தட்டறவேற்றிய நாமோதரந்தனை
தந்திந்தோ மென்றுடிகிறார்—தொண்டர். 3

பண்டரிநாதனே ரிரவதிலே—சென்னி
பாயுடன் மாவதைத் திரிக்கயிலே
கண்டுகுணமாய் கதவு திறந்துள்ளே
சென்றதிசயமதைச் சாற்றலுற்றார்—உள்ளே. 4

கனகாம்பரம் சென்னி அகத்தில்வைத்து—அவள்
கந்தையை ரங்கரிடையில்த் தரித்து
தினகாணுதிக்கவே வாயைத்திறவோரா
தெரிந்ததிச யித்ததைப் பாடலுற்றார்—அவாள், 5

தாஸருக்காய் நெய்தலைக்கடக்கு—ரங்கர்
தலையிலடிபட்ட தயவதினால்
தாஸருக்கு மாதுயரம் விளைத்திட்ட
தன்மையதைச் சொல்லிபாடலுற்றார்—அந்த. 6

புரந்தர தாஸர்தன் உருவெடுத்து—முடிகை
புரந்தர தாஸி யிடங்கொடுத்து
புரந்தர தாஸர்க்குப் பெருந்துய ரளித்திட்ட
புருஷோத் தமர்தனைப் போற்றுகிறார்—பக்தாள். 7

தாஸருக்கு விலங்கு பூட்டிடவே—ரங்கர்
தாளதிலே வந்து மாட்டிடவே
வாஸவனும் பணிந்து வாழ்த்திடும் பதத்துடன்
வன்மையை யேற்றிநின் றுதிகிறார்—பக. 8

கழுமரம் தாஸருக் கூன்றிடவே—ரங்கர்
கருணையதால் மரம் பொன்றிடவே
பழுதறவே யப்போ தொழுதகந்தத் தாஸரை
பரிந்துபசரித்ததை பாடலுற்றார்—ரங்கர் 9

புண்டரீகாக்ஷனை விர்ப்பவித்து—அங்கே
புரந்தரனை பொருளென உரைத்து
பண்டனை அடித்திட்ட பாபங்கள் போயிட
பண்ணின திருவிளை யாடலென்றார்—ரங்கர். 10

நிர்க்குணர் சொல்லி மறைந்திடவே—தாஸர்
நெஞ்சம் பதைத்து வருந்திடவே
சித்கனானந்தம தாகியெ செறிந்திட
சிரதை அனைவரும் பாடினரே—அவாள். 11

## தமாஷ்சிந்து.

### பல்லவி.

வேங்கடநாதா திரு வேங்கடநாதா

### சரணங்கள்.

பாங்காக பக்தர்களை பாதுகாத் தாளலையா
நீங்காத நிஷ்டையினை நீதந்திடல்லையா வே 1
ஓங்காரத் துள்ளொளியாய் ஓங்கிநிற்றல் நீயலவோ
நீங்ககற்ற உன்னையன்றி தெய்வமின்னம் பலவோ வே 2
பதத்தில் பதார்த்தமாகபதிந்துநிற்றல் நீயலவோ
விதமளிக்க உன்னிடத்தில்பின்னமும்வே றதைச்சொலவோ வே 3
கிழவீதியி லுறும்கீர்த்தி யுள்ள பூஸுரர்கள்
ஆழமுறும் கருத்தாம் ஆரணம தாலேற்றும் வே 4
தெற்குவீதி யிலுறும் தெளிவுடைய வேதியர்கள்
தக்கபடி மறையால் தத்பதம தாய்ச்சாற்றும் வே 5
மேலவீதி யிலுள்ளோர் மேன்மையான ச்ருதியதனால்
ஓலமிட்டு உன்பதத்தைஉளமுறநி யேஸ்துதிக்கும் வே 6



வடக்குவீதி யதிலேவாழுகின்ற வைஷ்ணவர்கள்
மொடக்கமற வேதிருவா ய்மொழியதை மொழங்கிவரும் வே 7
பற்றிபற்றி உந்தனைநான் பல்யமுதல் பஜிக்கலையோ
எற்றியெற்றி தள்ளிவிட வெனதுஸ்துதி ருசிக்கலையோ வே 8
நீசனென்று கைவிடவும் நினதுதாஸ னலவோ
ஈச்வரனே யென்மொழிகள் யெரித்திடுங் காட்டினிலவோ வே 9
முதலைவசமாம்கஜத்தை முதல்வனே ரக்ஷிக்கலையோ
மதலையிவன் பேதையென்று மனதுசெய்தி ரக்கலையோ வே 10
பூரணமென் றுமறை புகல்வதுவும் உனையலவோ
நாரணனே உன்னையன்றி நானெவ்விடம் செலவோ வே 11
அந்தர்யாமி யென்றுமறை அனவரத முரைக்கலையோ
எந்தன்துயர் நீயறிய என்னுளத்தி ருக்கலையோ வே 12
நிர்க்குணனே என்பதத்தை நினைந்திடவும் வேறுமொன்றோ
சித்கனானந்தம் ஒன்றாக சேர்ந்த பிரியமாவதென்றோ வே 13

எஹிமுதம்—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

பண்டரியில் வாழும் பாண்டு ரங்கா ரங்கா—ஸ்ரீ
புண்டரீகனை யாள்கொண்ட ரங்கா ரங்கா. ப. 1
தொண்டனெனை ஆளொண்ணாதோ ரங்கா ரங்கா—நான்
தொண்டுசெய்துனைத்தொழுதேன் ரங்கா ரங்கா. ப. 2
பங்கஜ தளநயனா ரங்கா ரங்கா—ஸ்ரீ
பொங்கர வசயனா ரங்கா ரங்கா. ப. 3
மந்தராகா ரணனை ரங்கா ரங்கா—அதி
ஸுந்தராகிய பாண்டு ரங்கா ரங்கா. ப. 4
நீலமேக ச்யாமளஸ்ரீ ரங்கா ரங்கா—ஆதி
மூலனே யெனையாளுவீர் ரங்கா ரங்கா. ப. 5
கிரீட குண்டலதர ரங்கா ரங்கா—ஸ்ரீ
கருடத்வஜனே யாளுஞ் ரங்கா ரங்கா. ப. 6

கருணைபுரிய நீரும் ரங்கா ரங்கா—யித்
தருணம் வருவீர்பாண்டு ரங்கா ரங்கா. ப. 7

திருமென் மனக்கவலை ரங்கா ரங்கா—வரம்
தாருமோன் பதத்தில்ச்சேர ரங்கா ரங்கா. ப. 8

ஸ்வர்க்கத் தவருங்காண ரங்கா ரங்கா—மேலாம்
சித்தனானந்த மாகிய ரங்கா ரங்கா. ப. 9

## சௌராஷ்டிர—ராகம்.

### கண்ணிகள்.

மாசறுஞ்ஞானி மகிமாதிசயத்தைபாரு நல்ல
மாதுர்யமாகிய மாம்பழத்தின்பதை ஒரு 1.

ஸ்தூலதேகமெனுந் தோலைநன்றாக உரித்து நர்
சீலமதாகி சிவனதை உளத்தில் பதித்து 2.

காரணதேகமாம் கொட்டையை நன்றாகநீக்கி பரி
பூரணமான புகழின்ப மதனை தேக்கி 3.

மறுஜென்மமாகிய மாமரமே முளைக்காமல் தான்
வெறுஸஞ்சிதத்தின் வினையது ஒழிக்காமல் 4.

ஸர்வம்ப்ரமமெனவே சொல்லுசதையை யெடுத்து ஸத்
ஸாமதாவே ஸமாதியாம் பல்லால்கடித்து 5.

ஸாக்ஷியாக யிருக்கும் ஸாரசுவை முளதாக்கி ஸதா
ஸாக்ஷியாயையும் பொரியாய்ச் செரிக்கவே போக்கி 6.

நிர்குணமாகிய நிஷ்டையில் தானே தானாகி ஸத்
சித்தானந்த சிறப்புடையமதிதூகி. 7



## இராகம்—முகாரி,

### பல்லவி-

ஸபாஸேமேலிட ஸ்வாமிநீர் தந்த
சௌக்யத்தை என்ன சொல்வேன்

### அநுபல்லவி.

ஆபாஸமாம் தேகாதி அகிலமும்
அறிவினிடத்தில் தோற்றிமறைவது
தருவினிடத்தில் புருஷன்போல ஸ

### சரணம்.

ஆரோபமாம் இந்த அடர்ந்த காட்டினில்
அபவாத வழி கண்டு
நேருடனே சென்று நிவாத தீபம்போல்
நிச்சல மாகியே நின்ற நிலைக்கி
அச்சமில்லை ஒருக்காலு மினிமேல் ஸ 1

பொன்னுக்குள்ளே பூஷணங்க ளானது
பொய்யா யிருந்ததுபோல்
என்னுக் குள்ளே யீரேழுலகமும்
இருந்து பார்த்தால் லென்மயமே.
உற்றுணர்ந்து பார்த்தால் தன்மயமே ஸ 2

மணிக ளனேகங்க ளானாலும் அந்த
மணிகோர்த்த சரடொன்று போல்
பிணியான தேகத்தில் பேதை நானென்று
பூண்டிருந்தேன் புவன மெல்லாம்—நின்
றூண்டிருந்தேன் அறிவுமயமாய். ஸ 3

அபரிமிதானந்த வாரிதியே எந்தன்
அய்யா வெங்கடாசலமே
விபரீத ப்ராந்தியைப் போக்கி என்னுள்ளே
வெகுவாய் நின்ற விகல்ப மில்லாமலே
விபுவாய் நின்ற பராபர மூர்த்தே. ஸ 4

## இராகம்—ஆரபி.

### பல்லவி.

அய்யா நீர்தந்த ஆனந்த மாகினும்
அதிசய மாகவே மீதானுதையா

### அநுபல்லவி.

மெய்யான குரு வெங்கடா சலநாதனை
வேதாந்த வேத்யனை நாதாந்த மூர்த்தி என்னுட அ

### சரணங்கள்.

பழகப் பழகமெத்தப் பாக்கியம் வருகுது
பரமஸுகானந்தம் பரவசம் தருகுது
அழகான அறிவத்தீயால் அங்கமெலா முருகுது
ஆனந்த வெள்ளம் கங்குகரையற்று பெருகுது என்னுட அ 1

கண்டமிலாம லகண்டமாய் காணுது
கருவிகரணங்கள் கண்டாலும் வீணுது
அண்டமுனிவர்களுக்குள்ளும் தானென்று தோணுது
அடிநடு முடிவில்லா வான் தன்னைப்பூணுது என்னுட அ 2

கருணைமிகுந்த கடாக்ஷத்தி னுலந்த
காக்ஷியைக் கண்டு கலந்து உல்லாஸமாக
அருணப்ர காசம்போல் அகிலமெல் லாம்நிறைந்த
அறிவுட மகிமையை ஆருடன் சொல்வேன் என்னுட அ 3

---

## புன்னாக வராளி—இராகம்.

### பல்லவி.

தன்னையறிந்தேனே தானானந்த மானேனே

### அநுபல்லவி.

தன்னையறிந்து தலைவனையும் கண்டு
பின்னமில்லாமல் பிரிவரவே நின்ற



### சரணங்கள்.

அன்னமயமதிலே அறிவாகாச மானேனே
சென்னவயதுக்குள்ளே நான் சேஷித்துநின்றேனே
சொர்ணவிகாரங்கள் சேராத தங்கம்போல்
பின்னமிலாதொரு ப்ரும்மந்தானாகிய த 1

பாவியுடலதனில் சற்றும் பற்றுமலே யிருந்தேன்
தாவிவெளிதனிலே நான் தானே தானா யிருந்தேன்
ஆவியுக்குள்ளே யறிவாயிருந்துநான்
மேவிபதங்களுக்கு மேலாயிருக்குற த 2

கள்ளவிஷயங்களை நான் கட்டோடே வேரறுத்தேன்
கள்ளியைக் கண்டுகொண்டேன் மாயகபடமறிந்து கொண்டே[ன்
தள்ளிக்கதவை யடைத்த வெங்கடேசர்
பள்ளிக்கூடத்தினில் பாங்காய் படித்து நான் த 3

---

## ராகம்—கேதாரகௌளம்.

### பல்லவி.

இவருக்கு நானென்ன செய்தேனோ தெரியாது
என்னையிப்படி செய்ய

### அநுபல்லவி.

கயறும் தோண்டியும் போலே காயத்தோ டிருந்தென்னை
காளையும் கடுவாயும் போலவே
காயமெனக் கிரு காத்மாக்கின இ

பெண்டுபிள்ளை யில்லாமல் பேரூருமிலாமல்
கன்றுதீதி லாமல்
கண்டகர்மங்கள் செய்ய கால்கையுடலிலாமல்
அகண்டபெருவெளி உருவமாகிய
ஆதிமத்யாந்த ரகிதமாகிய இ 1

அச்வத்தப்ரதக்ஷணம் ஆதித்ய நமஸ்காரம்
அகிலகர்மங்களைத்தும்
விச்வாஸ மாகசெய்த விர்த்தியதை ஒழித்தும்
நச்வரமிந்த நாட்டிலே எங்கள்
நாதன்குரு வெங்கடா சலமாம் இ

புதப்பானை ஏபோலே போகமெனக் கிலாமல்
பூமி விஷயமெலாம்
மதவுண்ட நாவினால் நீருண்ட மரியாதி
சதுர்மறைகள் புராண சாஸ்திரம்
அதிலேயென் னளவாசை யிலாமல்செய்த . இ 3

## இராகம்—மோகனம்.

### பல்லவி.

பாபியாகிலும் பரமார்த்தர் தன்னைப்
பாரானோ முந்தி சேரானோ

### அநுபல்லவி.

தேவமானிட திர்யக்காதிகளாமிந்த
தேகத்தில் வேறாகி ஜெனித்ததிலே ஒரு

### சரணங்கள்.

பக்திவைராக்கியப் பாதையிலே என்ன
பாராக்கார ருண்டோ
முந்திமார்க்கத்தில் நடக்கிறபேர்களுக்கு
முள்ளுக்கள் போட்டதுண்டோ
சித்தஜெடங்களை சிந்திக்கும் பேர்களுக்கு
சிரவிலே கொம்புமுண்டோ
தத்துவமாம்தன்னைத் தானென் றறிந்தபின்பு
தானவனாகவும் தடைகளுண்டோ
பக்தியெனும்பரி பாகத்தினால் நல்ல
யுக்தியெனும்வெகு வேகத்தினால்
நித்யாநித்ய விவேகத்தினால் ஜீவ
முந்திவேணுமென்ற தாகத்தினாலொரு . பா 1

அல்பமானஉடல் அழிந்துபோகுமுன்னே
அறிந்தா லாகாதா
ஸ்வப்பனஜாக்ர ஸுஷுப்திகள் மூன்றாக னென்
சோதித்தா லாகாதா



கல்பனையாமிந்த காரண காரியத்தைக்
கண்டாலாகாதா
அற்புதமாம்தன்னை ஆரென் றறிந்தாக்கால்
அறியாப்பதமங்கே யாகாதோ
கல்பனைசெய்கிற மோகத்தினால் வந்து
த்பன்னமாகிய தேகத்திலே
விற்பன்னமாம் விவேகத்தினால் வெறும்
கல்பனையாமிந்த லோகத்திலே ஒரு . பா 2

வேதம்புகழும் வெங்கடாசல நாதனை
வேண்டாத குறைதானோ
மாதப்பராமிந்த மறைத்துங்கள் சாபமோ
மாயையின் றுணைதானோ
பாதகராமிந்தப் பாரில்பிறப்பதும்
ப்ரதிபந்த முறைதானோ
ஏதுவகையோ இது நானறியேனே
ஏழைகள்பாக்கியம் இதுதானோ
போதமெனும்பரி பூரணமாய் பிந்து
நாதங்களுக்கொரு காரணமாய்
சேதனமாம்ஜெகத் காரணமாமதை
சோதனைசெய்திடும் சூரனுமாயொரு பா 3

---

## புன்னாகவராளி—ராகம்

### பல்லவி.

தாயேசிவகாமி நீயேயில்லையோ தயைபுரிந்தாளடியம்மா சந்த
பேயனிடத்தில் பிசகிருந்தாலிப்போ பேசிடுவாயடி சும்மா

### அநுபல்லவி.

தீயவினையாலேமிகும் தாபமதை தீர்த்தாளவே
தாயாம் சரண்சிரயேபுரு வரமேயருள் பரமேச்வரி தாயே

### சரணங்கள்.

எட்டுவயசதை தொட்டோன் பதந்தனை
செட்டியாய் நம்பியுமம்மா யிப்போ

கெட்டபழியெலாம் கேட்கத் தலைவிதி
விட்டதுவேதடி சும்மா
சுட்டாநிலைதனை யுற்றிட சுட்டும்பொறி புலனற்றிட
ச்ருதியாதியின் முடிமீதுறும் பரமானந்த சிவமேயடி தாயே

தட்டிலம்புட தனங்க ளனைத்தையும்
கொட்டிக் கொடுத்திட்டு மம்மா
மட்டிப்புலையர் பகரும் பழிக்கென்ன
பாபமதேனேடி சும்மா
துஷ்டையவளா லாகிய துகளாமிரு ளகன்றிட்டிட
துரியநிலை தனிலே யுளமகலாஸுக மருள்வாயடி தாயே

சித்தானந்த ஸொரூபமதாகிய
சீர்பெற்றொளிர் ஸொப்ரகாசி
நிர்குணமான நிரந்தர ரூபியே
நிஷ்களமாம் பரமேசி
திக்காருமே யிலையெனை தக்கபடியாண்டிடத்
திருவாம் ஸுக மருள்வாயடி நிறைவாகிய பரிபூரணி தாயே

---

## ஆனந்தபைரவி ராகம்.

### கண்ணிகள்,

சிதம்பராலயத்தினில் சிறப்புற்றொளிரு மெந்தன்
செல்வியே சிவகாமி யம்மா வம்மா வம்மா
பதறிடவேவீணும் பழிவந்ததேனோ யிதை
பகருவாய் சிவகாமி யம்மா வம்மா வம்மா 1

பழிக்கென்று தானோயிந்த பாழுடலெடுத்ததும்
பராதேவி சிவகாமி யம்மா வம்மா வம்மா
செழிக்கும் சித்ஸுகத் துளம் சேர்ந்து சுகியாதேனோ
சித்ரூபி சிவகாமி யம்மா வம்மா வம்மா 2

கலியுகத் திலேயுள்ள கடுமையாம் சதிக்கென்று
காயமளித்திட்டதேனம்மா வம்மா வம்மா
வலிய வினைகளெல்லாம் வந்துவந்தென் மனதை
வாட்டுதே சிவகாமியம்மா வம்மா வம்மா 3.



நல்லோர்களும் ஓராமல் நடுக்கும்பொய் மொழிந்திட
ஞாயமோ சிவகாமி யம்மா வம்மா வம்மா
யில்லாத வார்த்தையினை யிடிபோலுரைத்ததேனோ
இயம்பிடாய் சிவகாமி யம்மா வம்மா வம்மா 4

எக்குற்றமுமிலாத யேழையென்றறிந்தும் நீ
ஏதடி யிரங்கிலையம்மா வம்மா வம்மா
சித்தானந்தமான சிவஸொரூபம் ப்ரகாசமாய்
சீர்பெறும் சிவகாமி யம்மா வம்மா வம்மா. 5

## காம்போதி—ராகம்.

### பல்லவி.

அனியாயம் மனியாயம் அனியாய மென்கொடுமை
அறியாயோவடி யம்மம்மா

### அநுபல்லவி.

தனியாம் தத்வலெக்ஷியம் தானாயிருக்க வெண்ணி
சனியாம் மேழரகாட்டு சதியிலென் மனங்கண்ணி அ

### சரணங்கள்.

அறியேனறியேனறியேனோர் குற்றமதும்
அம்மம்மா சிவகாமியே
அறிவா யிதறிவாய்நீ அறிவாய் ஜகத்காரணி
அறிவுக்கு ளறிவாகும் அகண்ட பரிபூரணி அ

பொறுக்கேன் பொறுக்கேன் யினி பொறுக்கேன் வீண்பழியதை.
பொதுவாமென் சிவகாமியே
செருக்காயோன் தனமயலாம் சிலமழித்த தாயடி
கருக்கா யுரைத்தென்மனம் ஸோகிக்க [illegible] அ

திருவாக்கா லென்னிடம்நீ தெரிந்துரைக் காவிடினும்
திருமங்கல்ய முறைதந்தோமே
செறியும் சித்தானந்த சேவடி யில்பணிந்தேன்
சரியாம்சீர் பொருந்திய சரண்சிரத்தி லணிந்தேன் அ

### கமாசுராகம்—சாப்புதாளம்.

தயைபுரிந் தாளாதேனோ தாயேயென் மீது
தயைபுரிந் தாளாதேனோ

## பல்லவி,

தனைபுரிந் தாளாதேனோ தானின்ப மாகாதேனோ.
துயரகடலிலாழ்ந்து துயருறும் விதிதானோ — த 1
யெங்கும்நிறைந்த தாயே யெளியேனு னுந்தன்சேயே
துங்கந்தன் னில்லையான தூயநல் ஸுகமாயே — த 2
விடையேறியே வாராய் வினைகளைத்தும் தீராய்
தடையற்றானந்த மீதாய் தழைத்திட வரந்தாராய் — த 3
அப்ரமேய வருவே யகண்டமதாம் திருவே
சித்பரமாகியதாம் சித்கனமாம் குருவே — த 4

## மாதவபவந்துதே—யென்றமெட்டு.

## பல்லவி.

நித்யநிராமயர்க்கு மங்களம்
நிர்மலமானவர்க்கு மங்களம் — நி

## சரணங்கள்.

ஸத்திய சோபருக்கு—ஸர்வபர தாபருக்கு
முக்தியதிபருக்கு மங்களம் — நி 1
எங்கும் நிறைந்தவர்க்கு—ஏதங்குறைந்தவர்க்கு
ஸங்கம் துறந்தவர்க்கு மங்களம் — நி 2
சித்கனானந்தருக்கு—சிர்பெறும் ஸ்வதந்தருக்கு
நிர்குண ஸுந்தரர்க்கு மங்களம் — நி 3

நிர்குண வநுஸந்தானம்
நிலைத்திதென் றென்றும் வாழ்க
நர்கருத்தோடுபாடி
நல்முற கேட்போர் வாழ்க.
சித்கனானந்தபூர்ண
ஸொருபமும் வாழ்க வாழ்க
ஸத்குரு வாகுமீசன்
சரணமென் றென்றும் வாழ்க.

**தத்துவசிந்தனம் முற்றிற்று.**

224602